
விளம்பரங்கள்
அனைத்துவகையான விளம்பரங்களையும் பிரசுரிக்க நாடுங்கள்...
தினப்புயல்
154, 6ம் ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

நடுநிலை இதழ்
# தினப்புயல்
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

அன்பான வாசக நெஞ்சங்களே
எமது தினப்புயல் பத்திரிகை தொடர்பான அனைத்து விமர்சனங்களையும், ஆக்கங்களையும் வரவேற்கின்றோம்.

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885 Email:tthinappuyalnews@yahoo.com இதழ் - 65

## உலகநாடுகளின் அடுத்த இலக்கு மஹிந்தவா?



## முள்ளிவாய்க்கால் பிரச்சினைக்கு முட்டுக்கட்டையாக இருந்தது இந்தியாவே




## தமிழரசுக்கட்சி ஆயுதக்கட்சிகளை புறக்கணித்தால் எமது கட்சிகளை பலப்படுத்த வேண்டிய அவசியம் உருவாகும்

- எம்.பி சுரேஸ்

Kugan Motor Stores
IMPORTERS AND DEALERS IN TRACTOR& MOTOR SPARE PARTS.
TAS ENGLAND Mahindra MASSEY FERGUSON Perkins TAFE Ashok Leyland
No: 52, 2nd Cross Street, Vavuniya.
Tel: 024 2221845
Fax: 024 2221842
Mobile: 0777735967

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# உலக நாடுகளின் அடுத்த இலக்கு மஹிந்தவா...?



சர்வதேச அரசியல் அரங்கில் இன்று அதிகம் பேசப்படும் விடயங்களில் இலங்கைப் பிரச்சினை பிரபாகரனால் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது. இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பான உலக நாடுகளின் பார்வை இன்று இனப்படுகொலை என்ற நோக்கில் அதிக அழுத்தத்துக்குரிய பேச்சுப்பொருளாக மாறியுள்ளது. சர்வதேச இனப்படுகொலை தொடர்பிலான விசாரணை இப்போது விவாதத்துக்குரிய விவகாரமாகியுள்ளது. ஏற்கனவே 2010 ஜனவரியில் இத்தாலியிலுள்ள நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் இலங்கைப் போர்க்குற்றங்கள் தொடர்பிலான முதற்கட்ட விசாரணையை நடத்தியிருந்தது. அதன் தொடர்ச்சியாக அனைத்துலக மனித உரிமைகள் ஒன்றியம், இலங்கையின் சமாதானத்திற்கான ஆசியப் பேரவையின் வேண்டுகோளுக்கிணங்க தற்போது 2ஆவது கட்ட அமர்வினை நடத்தியுள்ளது.

இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை தொடர்பான சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்பட்டால் அது எப்படி இருக்கும் என்பதை இவ்வாண்டு ஜேர்மனியில் நடைபெற்ற நிரந்தர தீர்ப்பாயத்தின் அமர்வுகள் கோடிட்டுக் காட்டியுள்ளன. அதாவது இவ்வமர்வில் இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலையே என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. முழுமையான அறிக்கை வாதங்களின்பின் வெளிவருமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் இத்தீர்ப்பாயத்தின் இறுதி அறிக்கை சர்வதேச மட்டத்தில் விவாதிக்கப்படும்போது உலக நாடுகளின் அடுத்த இலக்கு மஹிந்த ராஜபக்ஷவாகவே இருக்கப்போகிறார் என்பதில் சந்தேகமில்லை.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடருக்கு இன்னமும் 4 மாதங்கள் கூட இல்லாத நிலையில் அங்கு தனக்கெதிரான பொறிமுறை ஒன்று ஏற்படுத்தப்படப் போவதை இலங்கை ஜனாதிபதி தற்போது நன்கறிந்து கொண்டுள்ளார். இதற்காக தன்மீது ஏற்படப்போகும் நீதி விசாரணையை எப்படி சாதகமாக ஆக்கலாம் அல்லது நீர்த்துப் போகச் செய்யலாம் என்பது தொடர்பிலான காய்நகர்த்தல்களை இப்பொழுது முதலே ஜனாதிபதியவர்கள் செய்யத் தொடங்கியுள்ளார். இதற்காக வெளிநாடுகளுக்கான முன்கூட்டிய விஜயத்தை மாநாட்டில் கலந்துகொள்ளப்போகும் குழுவினர் மேற்கொள்ளத் தயாராகி வருகின்றனர்.

இந்நிலையில் ஜேர்மனியின் நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் கருத்து இலங்கைக்கான சாதகமான சூழலை சிறியளவில் ஏற்படுத்தியுள்ளது இப்போது. அதாவது இலங்கையரசின் இனப்படுகொலைக்கு உடந்தையாக அமெரிக்காவும், பிரித்தானியாவும், இந்தியாவும் செயற்பட்டதாக சுட்டிக்காட்டியுள்ளது. இருப்பினும் இந்தியா மீதான குற்றச்சாட்டுக்குத் தேவையான ஆதாரங்கள் போதுமானதாக இல்லை என்று கூறியுள்ளது. எனினும் இனப்படுகொலைக்கு அனுசரணை வழங்கிய விவகாரம் மிக ஆழமாக விவாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிலமையானது இலங்கை அரசின்மீதான நீதிநடவடிக்கை எடுத்தலில் தாக்கத்தை செலுத்தலாம். ஆகவே அனுசரனை வழங்கிய விவகாரத்தை முதன்மைப்படுத்திப் பேசும் முக்கிய தருணம் இதுவாக அமையக்கூடாது என்பது தற்போதைய எதிர்பார்ப்பு. (உள்நாட்டிலேயே விசாரணைகளை மேற்கொள்ளுங்கள் என அமெரிக்கா ஐ.நாவில் கொண்டுவந்த தீர்மானங்களின் போது கூறியமைக்கும், சர்வதேச விசாரணையை ஆதரிப்போம் என்ற பிரிட்டனின் நிலைப்பாட்டுக்குமான காரணத்தை இப்போது நாம் விளங்கிக்கொள்ளலாம்.) ஆனால் இனிமேல் இரட்டைவேடம் போடமுடியாத சூழ்நிலைக்குள் இவை தள்ளப்பட்டுள்ளன என்பதும் அதேவேளை ஐ.நாவின் தீர்மானங்களையே பொருட்படுத்தாத இவ்வல்லரசுகள் இந்த தீர்ப்பாயத்தின் முடிவுக்கா பதிலளிக்கப்போகிறது என்ற சந்தேகமும் எழாமலில்லை.

2009இல் இலங்கையில் போர் முடிவுக்கு வந்ததையடுத்து சனல் 4வின் ஒளிநாடாக்கள் இலங்கையரசின் மனிதவுரிமை மீறல்களை அம்பலப்படுத்தியிருந்தன. இவ்விடத்தில் ஒன்றைக்குறிப்பிடவேண்டும். அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா போன்ற நாடுகள் இலங்கைக்கு இறுதிப்போரில் உதவியபடியினால் இலங்கைக்கு எதிரான மனிதவுரிமை மீறல் குறித்து இந்நாடுகள் வெளிப்படையாகச் சர்வதேச மத்தியில் தெளிவுபடுத்த அவ்வளவு தூரம் முனைப்புக்காட்டி இருக்க மாட்டார்கள். ஆனால் ஊடகம் என்ற வகையில் சனல் 4 காட்டிய ஆதாரங்களே உலகில் மனிதாபிமானம் கொண்டவர்களை நிலைகுலைய வைத்தது என்பது உண்மையான விடயம்.

பொதுநலவாயநாடுகளின்மாநாடு முடிவடைந்த பின்னர் இலங்கை அரசின் மீது தொடர்ச்சியாக மேற்குலகில் அழுத்தங்கள் அதிகரித்துள்ளன. அத்துடன் புலம்பெயர் நாடுகளின் தமிழர்கள் (டயஸ்போரா) தமது காத்திரமான பங்களிப்பை இது தொடர்பில் வழங்கியிருக்கின்றனர். ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கையில் செய்தித் தணிக்கை என்பது மிகவும் இறுக்கமாகப் பேணப்பட்டிருந்தது. போர் இடம்பெறாத இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழும் மக்கள் கூட சரியான தகவல்களைப் பெற முடியாதபடி இலங்கையரசு ஊடகங்களை கட்டுப்படுத்தி முட்டுக்கட்டைகளைப் போட்டது. ஆனால் புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ்மக்கள் இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றச்சாட்டுக்கள் இனப்படுகொலைகள் தொடர்பில் பாரிய போராட்டங்களை மேற்கொண்டு இன்று சர்வதேச ரீதியிலான நீதி விசாரணைக்கு வழியேற்பட ஓரளவு உதவி செய்துள்ளனர்.

தற்போது ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள விரும்புவதாகக் குறிப்பிடப்படும் நிலையில் சர்வதேச ரீதியிலான அழுத்தம் பலமாகவே இலங்கை மீது இருக்கிறது எனலாம். போர் முடிவுக்கு வந்து நான்கரை ஆண்டுகள் முழுதாக முடிந்துள்ள நிலையில் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை நடத்த காத்திரமான, சுதந்திரமான எந்த முயற்சிகளும் மேற்கொள்ளப்படாமலே இருக்கிறது. இதனாலேயே சர்வதேச விசாரணைப் பொறிமுறை தெரிவாகியது. அத்துடன் இலங்கையில் தமிழ்மக்களுக்கான வரலாற்றில் பதியப்பட்டுள்ள பல துரோகங்களும் இதற்கு ஒருவிதத்தில் காரணமே. 1987இல் இலங்கை இந்திய ஒப்பந்தம் தமிழர்களுக்கு சாதகமானது என்ற நோக்கில் உருவாக்கப்பட்டிருந்தாலும் இன்று அது பயனற்ற ஒன்றாகவே மாறியுள்ளது. வரலாற்றில் தமிழர்க்கெதிரான இனக்கலவரங்கள் , 1970இல் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சியில் சோல்பரி அரசியல் யாப்பின்படி தமிழர்க்கான அரசியல் பாதுகாப்பு நீக்கப்பட்டது. 1977இல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை J.R ஜெயவர்த்தனவால் உருவாக்கப்பட்டது. சந்திரிக்கா காலத்தில் தமிழ் மக்களுக்கான ஓர் அரசியல் தீர்வை வைப்பதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுபெரும்பான்மைஇல்லைஎன்பதை காரணம் கூறி தட்டிக்கழித்தமை, இவற்றை விட முக்கியமான ஒஸ்லோபிரகடனம் நடைமுறைப்படுத்தப்படாமை இப்படிப் பலவற்றைக் குறிப்பிடலாம்.

3 தசாப்தங்களுக்கு மேலாகத் தொடர்ந்து வந்த விடுதலைப்புலிகளின் ஆயுதப்போராட்டம் முற்றுப்பெற்று 41/2 வருடங்களாகிவிட்டது. இலங்கை அரசாங்கத்தின் விடுதலைப்புலிகளுக்கு எதிரான போருக்கான நியாயத்தை உலக நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன என்றே கூறவேண்டும். ஏனெனில் சர்வதேச நாடுகளைப் பொறுத்தவரையில் விடுதலைப்புலிகள் அமைப்பென்பது பயங்கரவாத அமைப்புக்களில் ஒன்றாகவே பார்க்கப்பட்டது. இவ்வணுகுமுறையால்தான் விடுதலைப்புலிகளின் பலம் பலவீனமாக்கப்பட்டது. அத்துடன் சர்வதேச ரீதியாக விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடைவிதித்துள்ள 32 நாடுகளில் ஒன்றுகூட அதை இன்னும் நீக்க முனையவில்லை. இந்நிலையில் பொதுமக்களுக்கான ஒரு தீர்வினை அளிப்பதற்கு மஹிந்த அரசு ஆர்வம் காட்டாமைதான் இன்றைய சூழலில் சர்வதேசத்தின் கேள்வியாகவும் ஒட்டுமொத்த தமிழர்களின் கேள்வியாகவும் அமைந்திருக்கிறது.

இன்றளவில் சர்வதேச ரீதியாக பல நாடுகளின் தலைவர்களுக்கு எதிராக சர்வதேச விசாரணைப் பொறிமுறை உருவாக்கப்பட்டு பல தலைவர்கள் நையப்புடைக்கப்பட்டிருக்கின்றமையை வரலாறுகள் கூறும்.

இலங்கை விவகாரத்தைப் பொறுத்தவரையில் பல விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அவற்றில் இலங்கை ஜனாதிபதியைப் பொறுத்தவரையில் எத்தகைய சவால்களையும் சமாளிக்கும் திறமை பொருந்தியவர். எப்பேர்ப்பட்ட அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும் அஞ்சி அடிபணிந்து போகும் நிலைக்கு உள்ளாகுவார் என நம்புவதில் பலனில்லை. பலவீனத்தையும் பலமாக மாற்றிக்கொள்ளும் தந்திரோபாயத்தை நன்கு தெரிந்தவர். இலங்கையில் மஹிந்தவின் அரசியல் செல்வாக்கின் வெற்றிகள் இதை உணர்த்தும்.

அடுத்து அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் இந்தியா ஆகிய பலம் பொருந்திய நாடுகள் எப்போதும் இலங்கைஜனாதிபதியைஎதிர்த்து அவரை முற்றுமுழுதாக தமது கைப்பிடிக்குள் இருந்துதூக்கிஎறியமாட்டார்கள். காரணம் ஒன்று, இலங்கையின் இறுதி யுத்தத்துக்கு இந்நாடுகள்உதவியிருக்கின்றமைஅடுத்து பொருளாதார ரீதியாக இலங்கையின் பயனை பெற வேண்டியமை. இதில் முதலாவது விடயம் இன்று பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. இன்று இலங்கை இனப்படுகொலைக்கு அனுசரணை வழங்கியமை தொடர்பாக இந்நாடுகளும் சர்வதேச விசாரணைக்கு உட்பட வேண்டிய சூழல் உருவாகும் என்று கூட கூறப்படுகிறது. ஆனால் இவ்விடயம் அமெரிக்கா, பிரித்தானியாவிற்கு ஒரு பிரச்சினையே இல்லை. ஏனென்றால் அப்படி ஒரு கேள்வி கேட்கும் சூழல் உருவாகினால் கூட பயங்கரவாதத்தை அழிப்பது தமது கடமை என்று வெளிப்படையாகவே இந்நாடுகள் கூறும்.

ஆனால் இந்தியாவின் நிலைப்பாடு சற்று கேள்விக்குரியதுதான். ஈழத்தமிழர்க்கும் இந்தியாவுக்குமிடையிலான உறவு அத்தகையது. ஆனால் விடுதலைப்புலிகளை அழித்ததற்காகவும் பல இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் இனப்படுகொலைக்கும் இந்தியா உதவியது என்றால் அது இந்தியாவுக்கும் சர்வதேச அளவில் எதிர்ப்பலைகளை உருவாக்கும்.. ஆனால் இந்தியாவை எதிர்த்துக்கொண்டு இலங்கையால் எதனையும் சாதிக்கமுடியாது என்பது உண்மையான விடயம். ஆசியாவின் வல்லரசாக கருதப்படுவது இந்தியாவே. இந்த வகையில் அரசியல் பிரச்சினை மட்டும்தான் உலகநாடுகளின் அடுத்த இலக்காக மஹிந்த அமைய காரணமா என்றால் நிச்சயம் பதில் ஆம் என்பதாகவில்லை. இப்பிரச்சினைக்காக மட்டும் உலகநாடுகள் இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் என கூறமுடியாது. அதற்காக இலங்கையின் தலையெழுத்தை உலகநாடுகள் மாற்றும் என்றும் கூறமுடியாது. அந்தளவிற்கு இலங்கை முக்கியமான நாடும் இல்லை. ஆனால் பொருளாதார ரீதியான இந்துசமுத்திரக் கடல் பிராந்தியத்தில் இலங்கை இருக்கின்றமை சர்வதேச ரீதியில் இலங்கை பெறும் முக்கியத்துவத்துக்கு காரணம். இந்நிலையில் வர்த்தக நலன்கள் முக்கியம் பெறுகின்றன. வல்லரசு நாடுகளின் பிராந்திய ரீதியிலான செல்வாக்குக்கு இலங்கை அவசியமாக இருப்பதால்தான் இலங்கைப் பிரச்சினையை இன்று பெரிதாக எடுத்துப்போகின்றனர். மறுபுறம் சீனாவின் பொருளாதார வளர்ச்சி ஆசிய கடல்வலயத்தில் வளர்ந்துவரும் சீனாவின் ஆதிக்கம் இதனால் அமெரிக்காவின் 10 ஆண்டுகால ஆசிய பசுபிக் திட்டத்திற்கு ஏற்படவிருக்கும் இடையூறு. இதுபோன்ற காரணங்களால் தான் உலக வல்லரசுகள் இன்று இலங்கைப் பிரச்சினையில் சடுதியான அக்கறையைக் காட்டிவருகின்றன. இவை ஒருவகையில் மஹிந்த அரசுக்கு சாதகமான விடயங்கள் என்று கூட சொல்லலாம்.

இந்நிலையில் இலங்கைக்கு சர்வதேச ரீதியிலான அழுத்தங்கள் உருவாகியுள்ளன என்பது உண்மைதான். வீட்டோ அதிகாரம் கொண்ட நாடுகள் சதாம்ஹூசைன், கடாபி போன்றவர்களுக்குஎதிராகமெற்கொண்ட நடவடிக்கையை ஒத்ததான ஒரு நடவடிக்கையை இலங்கை ஜனாதிபதிக்கு எதிராக மேற்கொள்வதற்கான அதிகாரத்தை கொண்டிருக்கின்றதுடன் அதற்கான வழிமுறைகளைக் கையாளவும் தயங்கமாட்டார்கள். ஆனால் அவற்றைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளும் திரைமறைவில் நடைபெறுகின்றன என்றும் கூறத்தான் வேண்டும். இவ்வகையில் இலங்கை விவகாரம் என்பது தனித்து பார்க்கப்படும் ஒரு பிரச்சினையாக இல்லாது உலகின் அதிகாரம் மிக்க பல அரசுகளும் தொடர்புபட்டுள்ள ஒரு விவகாரமாக வடிவம் பெற்றுள்ளதால் தமிழ் தலைமைகள் இவ்விவகாரத்தை மிகவும் கவனமாகக் கையாள வேண்டிய சூழலும் உருவாகியுள்ளது.

**அநாமிக்கா**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## கூட்டமைப்பின் கூட்டாட்சி குழம்பிவிடக்கூடாது

தமிழ்மக்களின் ஏகபோக தெரிவாக இன்று விளங்கிக்கொண்டிருக்கும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பானது மக்களுக்கான அரசியல் தலைமைகளாகவும், சமூக பாதுகாவலர்களாகவும் இன்று காணப்படுகின்றனர். விடுதலைப்புலிகளின் காலத்தில் அமைதியான அணுகுமுறையைக் கடைப்பிடித்து வந்த த.தே.கூட்டமைப்பு இன்று அரசியல், சமூக, பொருளாதார, அபிவிருத்திகளுக்காக தமிழ்மக்கள் சார்பாக அரசாங்கத்திடம் குரல் கொடுத்து வருகிறது.

தமிழ்மக்களுக்கான அரசியல் தீர்வுகாணல் எனும் விடயத்தின் அடிப்படையின் கீழ் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ஒரு கூட்டுக்கட்சியாக இன்று செயற்படுகிறது. இந்தக் கூட்டாட்சியைக் குழப்பும்படியான செயற்பாடுகளில் கட்சி உறுப்பினர்களாக இருந்தாலும்சரி, வெளியிலுள்ளவர்களாக இருந்தாலும்சரி ஈடுபடக்கூடாது என்பதே இன்றைய சூழலில் முக்கியமானதொன்றாக காணப்படுகிறது.

சர்வதேச அரசியல் இலாபங்களை கணக்கில் கொண்டே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, உள்நாட்டுத் தீர்வுக்கான ஜனாதிபதி அழைப்பை நிராகரித்து வருவதாக அரசதரப்பு இப்போது குற்றம்சாட்டிவருகிறது. அதற்கு ஏற்றாற்போல கூட்டமைப்பின் செயற்பாடுகளும் அமையப் பெறுகின்றன. வவுனியாவில் 24.12.2013 செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு கிழக்கு மாகாண சபைகளின் உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் கூட்டமைப்பின் சில முக்கிய உறுப்பினர்கள் கலந்துகொள்ளவில்லை. சில உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது. இதுபெரிய சர்ச்சையை இன்று தோற்றுவித்திருக்கிறது.

அத்துடன் தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஏனைய இயக்கக்கட்சிகளைச் சேர்ந்தவர்களை ஓரங்கட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும், அதனால் இயக்கக் கட்சிகள் தம்மைப் பலப்படுத்திக்கொள்ளவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது என்றும் இப்போது தெரிவித்து வருகின்றனர். அத்துடன் தமிழரசுக்கட்சியின் சில மூத்த முக்கிய உறுப்பினர்கள் அரசாங்கத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றனர் என்றும் இன்று பேசப்படுகிறது.

இவ்வகையில் தமிழ்மக்களின் அரசியல் தலைவிதியை தீர்மானிக்கும் ஆதிக்க சக்தியாக இருக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் கேளிக்கைக்கு உரிய ஒன்றாக மாறிவிடக்கூடாது. இரத்தமும் சதையுமாக போராடி தற்போது துன்பத்துள் வீழ்ந்திருக்கும் தமிழினத்தின் வேதனைகளை நன்கறிந்து கொண்டிருக்கும் கூட்டமைப்பு தமக்குள் ஒற்றுமையைப் பேணுவது முக்கியமானது.

பல்கலைக்கழக மாணவர்கள் அச்சுறுத்தப்படல், கைதுசெய்யப்படல், காணி அபகரிப்பு, பெண்கள் மீதான வன்முறைகள், வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவ பிரசன்னம், காணாமல்போனோர் தொடர்பிலான முடிவுகள், மக்களின் மீள்குடியேற்றம் போன்ற முக்கிய பிரச்சினைகள் இன்றுவரை தொடரும் நிலையில் இவை தொடர்பிலான தீர்வுகளைப் பெறுவதற்கு அயராது பாடுபடவேண்டியுள்ளது. அடுத்த ஆண்டில் நடைபெறவிருக்கும்ஜெனீவாமாநாட்டினூடாகவாவது இலங்கைத் தமிழர்க்கான தீர்வுவிடயம் சாதகமாக அமையவேண்டும் என்ற நல்ல நம்பிக்கையில் அடுத்தஆண்டை தமிழ்மக்கள் எதிர்கொள்ள தயாராகின்றனர். இதனால் கூட்டமைப்பின் கூட்டாட்சி குழம்பக்கூடாது என்பதே இன்றைய காலகட்டத்தின் அவசியமாகும்.

# முற்றுப்புள்ளியிடப்பட்ட ஆயுதப்போராட்டம்

## திம்பு முதல் டோக்கியோ வரை

65

இதேநேரம் ஈராக் மீது யுத்தத்தை மேற்கொள்ள அமெரிக்கா தீவிர முனைப்பில் இறங்கியிருந்தது. இன்று அல்லது நாளை யுத்தம் வெடிக்கலாம் என்ற நிலை இருந்தது. இப்பேச்சுக்களில் கலந்துகொண்ட ஜீ.எல் பீரிஸ் இரண்டாம் நாள் பேச்சுவார்த்தை முடிவில் ஈராக் மீது அமெரிக்கா யுத்தத்தை ஆரம்பித்தாலும் இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் நாடுகளின் நிதியுதவியில் எந்தவித பாதிப்பும் ஏற்படாது எனத் தெரிவித்தார்.

மார்ச் 20ஆம் திகதி ஈராக்மீது அமெரிக்கா யுத்தத்தைத் தொடங்கியது. உலகமே பரபரப்பான சூழலில் இருந்த நேரத்தில் மூன்றாவது நாளிலும் பேச்சு



18ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதிவரை நடைபெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து நோர்வே அறிக்கையொன்றை வெளியிட்டது. அவ்வறிக்கையில் கப்பல் தாக்கப்பட்ட சம்பவம், கண்காணிப்புக் குழுவுக்கு கூடுதல் அதிகாரங்கள், ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அடிப்படையிலான தீர்விற்கு இருதரப்பும் உடன்பாடு தெரிவித்தல், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை சாதகமாகப் பரிசீலிக்க புலிகள் இணக்கம், படைத்தரப்பு, புலிகள் தரப்பு அடிக்கடி கூடுவதற்கு இணக்கம் போன்ற அம்சங்களே அவ்வறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

பேச்சுவார்த்தை நடைபெற்று முடிந்தவுடன் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அன்ரன் பாலசிங்கம் உள்ளூராட்சித் தேர்தல் விரைவில் நடக்க வேண்டும். நாங்கள் அதில் போட்டியிடமாட்டோம். விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அது செயலிழந்த ஒரு அமைப்பு. நாங்கள் சிறுவர்களைப் படைக்குச் சேர்ப்பதில்லை என கூறினார்.

ஈராக் யுத்தம் தொடர்பாகவும், செய்தியாளர்கள் பாலசிங்கத்திடம்

பாராளுமன்றப் பிரதிநிதிகள் புலிகளுடனான சந்திப்பில் கலந்துகொண்டு ஆனந்த சங்கரிக்கெதிரான கருத்துக்களை தெரிவித்தனர்.

இதனையடுத்து சங்கரி தனது கருத்துக்களை பகிரங்கமாக வெளிப்படுத்தும் வகையில் கட்சியின்



யாழ்மாவட்ட அலுவலகத்தில் 23 மார்ச் 2003இல் சந்திப்பொன்றை நடத்தினார். அச்செய்தி 24இல் ஊடகங்களில் வெளிப்படுத்தப்பட்டது. அவ்வறிக்கை பின்வருமாறு அமைந்திருந்தது. தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் புலிகள்தான் என்று நாம் எப்போதுமே கூறவில்லை. புலி இரு என்றால்

புலிகளுக்கிடையில் ஜப்பானில் நடந்தது. அப்போது அதிகாரப்பகிர்வு தொடர்பான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டபோது புலிகள் தமது வழமையான நகர்வைத் தொடர்ந்தனர்.

புலிகளின் இருபது பேரைக்கொண்ட அரசியல் விவகாரக் குழு வெளிநாடுகளுக்கான மூன்றுமாதப் பயணத்தை முடித்துவிட்டு வந்த பின்னரே அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகள் பற்றியதான தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும், அதுவரை அதிகாரப்பகிர்வு பற்றிப் பேச முடியாது எனவும் புலிகள் தெரிவித்தனர். ஆனால் அரசதரப்பு அதிகாரப்பகிர்வு தொடர்பான பேச்சுவார்த்தையில் ஓரளவு முன்னேற்றம் கண்டால் தான் நிதிவழங்கும் நாடுகளிடமிருந்து அதிக நிதியைப் பெறக்கூடியதாக இருக்கும் எனத் தெரிவித்து அரசியல்ப்பேச்சு முன்னேற்றம் கண்டால்தான் சர்வதேச ஆதரவுடன் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க முடியும் எனத் தெரிவித்தது.

முத்தரப்பும் தங்கள் தங்கள் இலக்கு நோக்கியே காயை நகர்த்த இப்பேச்சுவார்த்தை அரங்கைப் பயன்படுத்த முனைந்தனர். தமிழ்மக்களின் நியாயமான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பேச்சு கிடப்பில் போடப்பட்டுக் கிடந்தது.

தினக்குரல் பத்திரிகை 23 மார்ச் 2003 இதழில் கோகர்ணன் என்பவர் நிலைமையை மிகத்துல்லியமாக இப்படி எழுதியிருந்தார். கூஷகூஷபுரிந்துணர்வு உடன்படிக்கையும் போர்நிறுத்தமும் எதற்காக என்ற கேள்வியைக்கூட கவனியமல் போர்நிறுத்தத்தை நீடிப்பதைவிட வேறு இலக்கு இல்லாமலேயே அரசியல் நடைபெறுகிறது. மறுபுறம் விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்குமுள்ள முரண்பாடுகளே குறிப்பாக அரச படையினரும் விடுதலைப்புலிகளுக்குமிடையே இன்னமும் தணியாமலுள்ள முறுகல் தொடர்பான விடயங்களே வெகுஜனங்களின் பிரச்சினை என்ற போக்கை நாம் வடக்கு, கிழக்கில் காணக்கூடியதாக உள்ளது.;; இதுதான் உண்மையாகும். மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தை அரங்கில் உறுதியான முனைப்புக் காட்டப்படவே இல்லை.

வினவியபோது, சதாம் ஹூசைனின் சர்வாதிகாரத்துக்கு நாங்கள் எதிரானவர்கள் என்றாலும் ஐ.நா சபையின் உரிய அங்கீகாரத்துடன் மத்திய கிழக்கிலுள்ள தீய சாம்ராஜ்ஜியத்துக்கு எதிராக ஐ.நாவின் அங்கீகாரத்தை உரிய முறையில் பெற்று இந்த நடவடிக்கையை எடுத்திருக்கலாம் என்றார்.

### புலிகளின் ஏகபிரதிநிதித்துவத்தை ஆனந்தசங்கரி மறுத்தார்

ஜப்பானில் பிரின்ஸ் ஹோட்டலில் ஆறாவது சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெற முதல் வன்னிக்கு வந்த பாலசிங்கம் தமிழ்க் கூட்டமைப்புடன் ஒரு சந்திப்பை நடத்தினார். தமிழ்ச்செல்வனிடமிருந்து அனைத்து கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

புலிகளின் ஜனநாயக மறுப்பைத் தொடர்ந்தும் கேள்விக்குட்படுத்தி வந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி, யாழ் நூலகத் திறப்புவிழா தொடர்பில் புலிகளை நேரடியாகவே எதிர்த்தார். இதனால் அவர் புலிகளினால் உயிர் அச்சுறுத்தலை எதிர்கொள்கிறார் என்ற தகவல் வெளியில் கசியத் தொடங்கியது.

தென்னாசியாவிலே மிகவும் சிறந்த நூலகமான யாழ் நூலகத்தை மீண்டும் புதுப்பித்து யாழ்மேயராக இருந்த பொன் கந்தையாவால் அது மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்படுவதாக இருந்தது. நூலகத்தை திறக்காமல் அரசியல் நோக்கத்திற்காக புலிகள் தடுத்தனர். இதனால் ஆத்திரமுற்ற ஆனந்தசங்கரி வாய்திறந்து பேசத்தொடங்கினார். இதன்மூலம் புலிகளுக்கும், ஆனந்த சங்கரிக்குமிடையில் உறவுகளில் முரண்பாடுகள் ஏற்படத் தொடங்கியது.

07 மார்ச் 2003ஆம் திகதி கிளிநொச்சியில் நடைபெற்ற புலிகளுடனான தமிழ்க் கூட்டமைப்பில் கலந்துகொள்ளாமல் அதற்கு முந்திய தினமே சங்கரி இந்தியா பயணமானார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஏனைய

இருப்பதற்கும் எழும்பு என்றால் எழுவதற்கும் நாங்கள் தயாராகஇல்லை. அப்படியொரு நிலை வந்தால் எமது கட்சியையும் கலைத்து விட்டுத்தான் போகவேண்டி வரும். தமிழ்மக்களுக்காக பாடுபட்ட அமரர் அமிர்தலிங்கத்துக்காக அழுவதற்குக்கூட எமக்குச் சுதந்திரமில்லை. அவரது நினைவாக எழுதப்பட்ட புத்தகத்தைக் கூட வெளியிடாமல் இருக்கின்றோம். இதுதான் யதார்த்தம். யாழ் பொது நூலகத்தின் 99வீதமான வேலைகள் முடிவடைந்துவிட்டது. அதனைத் திறப்பதற்கு முடியவில்லை. நூலகத்தைக் கட்டி முடிப்பதற்கு அரும்பாடுபட்ட யாழ் மேயர் செல்லன் கந்தையன் திறந்துவைப்பதற்கு முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தேர்தல்களில் தனது உயிரைக்கூட துச்சமாக மதித்த கூட்டணியைத் தலைநிமிர வைத்த கந்தையனுக்கு துரோகிப்பட்டம் சூட்டப்பட்டிருக்கிறது என ஆனந்த சங்கரி தெரிவித்திருந்தார்.

### டோக்கியோ மாநாட்டை நோக்கி

ஜப்பானில் ஜூன் 2003இல் நடைபெறவிருந்த நிதிவழங்கும் மாநாட்டை நோக்கியே அனைத்துக் கவனக் குவிப்புக்களும் செய்யப்பட்டு வந்தன. டோக்கியோ மாநாட்டைப் புலிகள் பகிஷ்கரிக்கப் போவதாக அடிக்கடி தெரிவித்து வந்தனர். அதேநேரத்தில் புலிகளின் இந்த அறிவிப்பு தொடர்பாக உதவிவழங்கும் நாடுகள் தமது கருத்தை வெளிப்படுத்தின. புலிகள் இதனைப் பகிஷ்கரித்தால் இலங்கையின் அமைதி முயற்சியில் பின்னடைவு ஏற்படுமென அச்சம் வெளியிட்டிருந்தனர்.

இதேவேளை நாட்டில் அரசியல் மாற்றமொன்று ஏற்படலாமென்ற ஹேஸ்யங்கள்பரவலாகஎழத்தொடங்கின. சமாதான முயற்சியின் பிரதான பங்காளராக இருந்த நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க்இதுதொடர்பில்கொழும்பில் வைத்துக் கருத்துத் தெரிவிக்கும்போது கீழக்கண்டவாறு பிரஸ்தாபித்தார்.

தொடர்வான்...

# தமிழரசுக்கட்சி ஆயுதக்கட்சிகளை புறக்கணித்தால் எமது கட்சிகளை பலப்படுத்தவேண்டிய சூழ்நிலை உருவாகும் - எம்.பி.சுரேஸ்

**தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஊடகப்பேச்சாளரும், ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் செயலாளருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் உடனான தினப்புயல்ப் பத்திரிகையின் நேர்காணல்**

கேள்வி:-வணக்கம், யுத்தம்நிறைவடைந்து 4 1/2 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் தற்போதுள்ள அரசியல் கண்ணோட்டம் பற்றி என்ன கருதுகிறீர்கள் ?

பதில் :- யுத்தம் முடிந்த இன்றைய சூழலில் இலங்கைக்கு சாதகமான அரசியல் நிலைமைகளே காணப்படுகின்றன. மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்ட ஜனாதிபதியால் இலங்கைத் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்கமுடியும். இதனை சர்வதேச சமூகங்களும் வலியுறுத்துகின்றன. இதுதொடர்பில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் அரசுதரப்புடன் பலகட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்கின்றது. ஆனால் தீர்வுகள் பெறப்படாதவையாகவே இருக்கின்றன. இந்நிலையில் இன்றைய சூழலில் தமிழர் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் அரசாங்கம் அக்கறை செலுத்தவில்லை, இடம்பெயர்ந்த தமிழ்மக்கள் தமது சொந்தக் கிராமங்களுக்கு முற்றுமுழுதாக மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை, வீடமைப்புத் திட்டங்களும் வழங்கப்படவில்லை. மாகாண முதலமைச்சரால் முதன்மைச்செயலாளரை உருவாக்க முடியவில்லை. ஆளுநரின் அதிகாரம் வடமாகாணசபையில் முதலமைச்சரைவிட அதிகம் உண்டு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

கேள்வி :- பொலீஸ் மற்றும் காணி அதிகாரங்களைத் தவிர வேறு என்னென்ன அதிகாரங்களை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பெறக்கூடியதாக இருக்கின்றது?

பதில் :- 13ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் 37 அதிகாரங்கள் மாகாண சபையிடம் இருக்கின்றது. ஆனால் இவ்வதிகாரங்களைக் கொண்டு நிர்வாகங்களை நடத்த அதற்கான அதிகாரிகள் ஒத்துழைக்கவேண்டும். உள்ளூராட்சி அலுவல்கள் மாகாணசபைக்குரியவை. தொழில் நியமனங்கள், இடமாற்றங்கள், சுற்றறிக்கைகள் வழங்குதல் யாவும் முதலமைச்சருக்குரியவை. ஆனால் ஆளுநரே இவற்றைச் செய்கிறார். உயர்தர, தேசிய பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் தவிர்ந்த ஏனையவையும் சுகாதாரத் துறையில் கிராமிய சுகாதார சேவையும் மாகாணசபையின் அதிகாரத்திற்குட்பட்டவை. ஆனால் இவை தொடர்பான அதிகாரங்கள் ஓரளவே வழங்கப்பட்டிருக்கின்றன. இவற்றை முழுமையாக நிர்வகிப்பதற்கு 13ஆவது சட்டத்தின்படி மாகாணசபைக்கான அதிகாரத்தை முழுமையாக வழங்கவேண்டியது அவசியம். இல்லையெனில் மாகாண சபையால் செயற்பட முடியாது.

கேள்வி :- இற்காக எத்தகைய அழுத்தங்களை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு வழங்கியிருக்கிறது?

பதில் :- முதலமைச்சர் இவ்விடயங்கள் தொடர்பிலான பல கடிதங்களை அனுப்பியுள்ளார். ஜனாதிபதியுடன் நேரடியாகவும் பேசியுள்ளார். ஆனால் அவை இன்னும் வழங்கப்படவில்லை. இதனை வெளியில் பேசி குழப்பங்களை விளைவிக்க முதலமைச்சரும் விரும்பவில்லை. ஜனாதிபதியுடன் தொடர்ந்தும் பேசி அவற்றைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கிறார்.

கேள்வி :- இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக சர்வதேசம் அக்கறை கொண்டுள்ளது. மார்ச் மாநாடு நல்லதொரு தீர்வை வழங்கும் என்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு இப்பொழுது கூறிவருகிறது. உண்மையில் சர்வதேச சமூகம் இதுதொடர்பிலான தீர்வினை எடுக்க முற்படும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

பதில் :- தமிழ் மக்களுக்கு சாதகமாக அமையும் என்று நம்பவில்லை. ஆனால் இனஅழிப்புக்கான பொறுப்புக்கள், மனித உரிமை மீறல் தொடர்பிலான விடயங்களுக்கான அழுத்தம் சர்வதேச மற்றும் பிராந்திய அளவில் வழங்கப்படும் என்பது உண்மை. இதனால் ஜெனீவா மாநாட்டில் காத்திரமான ஒரு தீர்மானம் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தீர்மானம் இனப்பிரச்சினையை தீர்த்துவிடும் என்று கருதமுடியாது. இலங்கை இப்போது பௌத்த இனவாத சக்திகளின் பிடியில் சிக்குண்டிருக்கிறது. இந்நிலமை மாற்றப்படாத வரைக்கும் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படமாட்டாது. ஆனபடியால் இலங்கை மீது பொருளாதாரத்தடையோ, அரசியற் தடையோ ஏற்படும் போது பிரச்சினைக்கான தீர்வு பெறப்படலாம். தென்னாபிரிக்கா, பலஸ்தீனம் போன்ற நாடுகளில் இப்படியான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதனால் இலங்கைக்கும் அதற்கான சாத்தியம் உண்டு.

கேள்வி :- ஆயுதக்குழுக்களிலிருந்து வந்தவர்கள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் வெற்றி பெற்று இருக்கின்ற நிலையில் இவர்களை ஓரங்கட்டுவதற்கான நடவடிக்கைகளை தமிழரசுக்கட்சியினூடாக, இந்தியாவின் அனுசரணையுடன் அரசாங்கம் செய்கிறது என்று கூறப்படுகிறது. அதுபோல தற்போது ஈ.பி.டி.பி கட்சியானது அரசினால் ஓரங்கட்டப்பட்டு வருகிறது ஆகவே இவைகுறித்து...?

பதில் :- ஆயுதக்குழுக்களை ஓரங்கட்டுமாறு இலங்கையரசு பரிந்துரைக்கமுடியாது. அதற்கு அதிகாரமும் இல்லை. ஆனால் கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கிடையே பலவிதமான கருத்துக்கள் இருக்கலாம். அதனை வெளிப்படுத்துவது தவறில்லை. ஈ.பி.டி.பி ஓரங்கட்டப்படுவது என்பது ஒரு கண்துடைப்பு நடவடிக்கை என்றும் கூறலாம். நெடுந்தீவு பிரதேசசபைத் தலைவர் கொலை காரணமாக, ஆயுதக்குழுக்களிடம் இன்னமும் ஆயுதங்கள் இருக்கின்றனவோ என்ற சந்தேகத்தை தொடர்ந்தும் சர்வதேசத்திடம் உருவாக்க விரும்பாமலே அரசாங்கம் இப்படி செய்கிறது என்று கருதலாம். ஆனால் கூட்டமைப்பிற்குள் நாம் அனைவரும் கூட்டாகவே செயற்படுகிறோம். இந்திய அரசுடனும் கூட்டமைப்பு பேச்சுக்களை நடத்துகிறது.

கேள்வி :- இந்தியா இவ்விடயம் தொடர்பில் உதவுமா ?

பதில் :- ஆயுதக்குழுக்கள் பலவற்றுக்கும் முன்பு இந்தியா ஆயுதங்களை வழங்கியிருக்கின்றது. திம்பு பேச்சுவார்த்தையை ஆரம்பித்துவைத்தது. இலங்கை இந்திய ஒப்பந்தத்தை உருவாக்கியது. இப்படியாக பல அரசியல் ரீதியிலான உதவிகளை வழங்கிய வேளையில் ரஜீவ் காந்தியின் கொலை ஏற்பட்டதன் பின்னர் பல மாற்றங்கள் உருவாகின. ஆனால் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தமிழ்நாடு முழு அக்கறையுடன் செயற்படுகிறது. சட்டசபையில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதனால் இந்தியாவையும் புலம்பெயர் தமிழ் மக்களையும் தவிர்த்து நாம் தமிழ்மக்களுக்கான தீர்வு விடயங்களை நடைமுறைப்படுத்தமுடியாது.



கேள்வி :- தமிழ்மக்களுக்கான பிரச்சினைக்கான தீர்வு காண்பதில் ஏற்படும் சறுக்கல்களுக்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிலுள்ளவர்களுக்கிடையிலான ஒற்றுமையின்மையே காரணம் என்று கூறப்படுகிறது. இதுகுறித்து என்ன கூறுகிறீர்கள் ?

பதில்:-ஆம், உள்நாட்டிற்குள்இப்படியான அச்சம் இருக்கிறது. அது உண்மைதான். ஏனென்றால் கூட்டமைப்பை பதிவு செய்வதற்கு தமிழரசுக்கட்சி இன்னும் முன்வரவில்லை. நாம் ஒரே கட்சியாகவே செயற்படவிரும்புகிறோம். ஆனால் கூட்டமைப்பிலுள்ள ஏனைய கட்சிகள் தம்மை பலப்படுத்திக்கொண்டால்தான் தமிழரசுக்கட்சி எம்முடன் இணைந்து செயற்பட முன்வரும் என்றால் எமது கட்சிகளை பலப்படுத்தவேண்டிய அவசியமும் உருவாகும். மொத்தத்தில் வலுவான கூட்டமைப்பை உருவாக்கவேண்டும் என்றால் கூட்டமைப்புக்குள் இருக்கும் கட்சிகள் பலப்பட வேண்டும். தமிழரசுக்கட்சி ஒத்துவராதபடியால் ஏனைய கட்சிகள் தம்மை பலப்படுத்த வேண்டிய சூழல் இப்போது உருவாகிஇருக்கின்றது என்றுதான் கூறவேண்டும்.

கேள்வி :- தமிழரசுக்கட்சியின் இத்தகைய மனோபாவத்திற்கு அரசாங்கம் தான் பின்னணியில் காரணமாக இருக்கிறது என்று கூறப்படுகின்றதே ?

பதில் :- இதுபற்றி எனக்குத் தெரியாது. ஆனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலுள்ள ஏனைய கட்சிகளை ஓரங்கட்டும் முயற்சியை தமிழரசுக்கட்சி தீவிரமாக மேற்கொண்டுவருகின்றது. எமது கட்சிகளைக் குறித்து (ஆயுதக்குழுக்கள்) இவர்கள் ஆயுதங்களை வைத்திருந்தவர்கள் இவர்களை கைதுசெய்யலாம் என்று நேரடியாகவே கூறிவருகின்றது. ஈழப்போராட்டத்தில் ஆயுதக்குழுக்களின் பங்களிப்பு எந்தளவிற்கு இருந்தது என்பதனை தமிழரசுக்கட்சி உணரவேண்டும்.

கேள்வி :- தேர்தல் காலத்தில் விடுதலைப் போராட்டத்தை முதன்மைப்படுத்தி பிரச்சாரம் செய்து வெற்றிபெற்ற பலரின் செயற்பாடுகள் இன்று மக்களுக்கு அதிருப்தி அளிப்பவையாக இருக்கின்றன என்றும் கூட்டமைப்பு சார்பாக வெற்றி பெற்றிருக்கும் ஒருசிலர் அரசியல் அனுபவமில்லாதவர்கள் என்றும் இதனால் இவர்கள் சில வேளைகளில் அரசாங்கத்திடம் சோரம்போய்விடுவார்கள் என்றும் கருதப்படுகிறதே. இதுகுறித்து...?

பதில் :- ஆம், அது தவறான விடயம் தான். ஆனால் நாங்கள் விடுதலைப் போராட்டத்தில் நீண்டகாலமாக பாதிக்கப்பட்டவர்கள். அரசாங்கம் என்ன செய்திருக்கிறது என்பது எமக்குத் தெரியும். இதனால் நாங்கள் தேர்தல் வெற்றிக்காக போலியாக வீரவசனம் பேசவில்லை. அரசுடன் சார்பாக செயற்படவும் விரும்பமாட்டோம். கூட்டமைப்பில் உள்ளவர்கள் யாரும் இவ்வாறு செயற்படுகிறார்களா என்பது எனக்குத் தெரியாது. அப்படி யாரும் செயற்பட்டால் அவற்றை ஊடகங்கள் வெளிக்கொண்டுவருதல் அவசியம்.

அடுத்து அரசியல் ஞானம் எல்லோருக்கும் முழுமையாக இருக்கிறது என்பதற்கில்லை. எல்லோரும் விடுதலைப்போராட்ட வரலாறு தொடர்பில் எந்தளவிற்கு புரிந்துவைத்துள்ளனர் என்பதிலும் சந்தேகம் உள்ளது. ஆனால் அரசியல் ஞானம் இல்லாதவர்கள் இலகுவில் அரசாங்கத்திடம் சோரம் போவார்கள் என்றும் கூறமுடியாது. அதே வேளை சோரம் போகமாட்டார்கள் என்றும் கூறமுடியாது. ஏனெனில் கிழக்கு மாகாணத்தில் பியசேன மற்றும் தங்கேஸ்வரி போன்றோர் அரசுடன் இணைந்துகொண்டுள்ளனர். இதனால் அரசிடம் சோரம் போகின்றவர்களை கட்சியில் இருந்தும் பதவியிலிருந்தும் உடனடியாக நீக்கவேண்டியதுதான் அவசியம்.

கேள்வி :- புதுவருடத்தில் விடிவுக்காக காத்திருக்கும் தமிழ் மக்களுக்கு நீங்கள் சொல்லக்கூடியது என்ன ?


பதில் :- இந்த அரசியல் போராட்டம் 62 வருடமாக நடைபெற்றுவருகிறது. இது சரியென்பதில் மக்கள் உறுதியாக இருக்கின்றனர். ஆகவே மக்களின் உரிமைகளை வழங்குவதில் உறுதியாக இருப்பதுடன்எம்மைஎதிர்ப்பவர்கள்பலம் பொருந்தியவர்கள், ஆளும் கட்சியினர். இதனால் தீர்வுக்கான காலம் அதிகமாகும். சர்வதேச உதவியுடன் விரைவாக தீர்வைப்பெற கூட்டமைப்பு முயற்சிக்கும். அத்துடன் கூட்டமைப்பு தம்மை பலம் பொருந்தியதாக மாற்றிக்கொண்டு மக்களுக்கான சேவையை வழங்கவும் காத்திருக்கிறது.

**இரணியன்**

# அமைச்சர் விக்னேஸ்வரனின் அரசியல் அனுபமின்மை மீண்டுமொரு போர்ச்சூழலுக்குள் தமிழ்மக்களைக் கொண்டு செல்கிறது

இலங்கையின் உச்சநீதிமன்ற இளைப்பாறிய நீதிபதியும், வடக்கு மாகாண சபையின் முதலாவது முதலமைச்சரும் கனகசபாபதி விஸ்வலிங்கம் விக்னேஸ்வரன் ஆவார். இவர் ஒரு முன்னணி தமிழ் வழக்கறிஞரும், அரசியல்வாதியும் ஆவார். இவர் மாவட்ட நீதிமன்றம், உயர் நீதிமன்றம், உச்சநீதிமன்றம் ஆகியவற்றின் நீதிபதியாகவும், நீதித் துறை நடுவராகவும் பணியாற்றியவர்.


1979 மே 7 இல் இவர் நீதித்துறையில் இணைந்தார். மட்டக்களப்பு, சாவகச்சேரி, மல்லாகம் ஆகிய நீதிமன்றங்களில் நீதித்துறை நடுவராகவும், மாவட்ட நீதிபதியா கவும் பதவிவகித்த இவர் 1988ஆம் ஆண்டில் உயர் நீதிமன்ற நீதி



யரசராகப் பதவியேற்று, வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா, மற்றும் மேல் மாகாணங்களில் பணியாற்றினார். 1995ஆம் ஆண்டில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதி யரசரானார். உயர்நீதிமன்ற நீதியர சராக தமிழ்மொழியில் பதவிப்பிரமாண உறுதிமொழி எடுத்துக் கொண்ட விக்னேஸ்வரன், அந்த விழா வில் தமிழர்கள் இலங்கையில் எதிர்கொள்ளும் சிக்கல்கள் குறித்து ஆற்றிய உரை முக்கியமானதாகும். நீதி யரசர் விக்னேஸ்வரன் நீதித்துறையில் 30 ஆண்டுகளாகக் கடமையாற்றியுள்ளார். நீதித்துறைச் சேவைக்காலத்தின் போதுஉண்மையின் பக்கம், நீதி யின் பக்கம் நிற்க ஒரு பொழுதும் அவர் பின்வாங்கியதில்லை என்று குறிப்பிடப்பட்டவர்.

முன்னாள் உச்ச நீதிமன்ற நீதி யரசர் ஷிராணி பண்டாரநாயக்காவின் பதவியை மஹிந்த இராஜபக்ஷ அரசு அநீதியாகப் பறித்த போது நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களை விட 18ஆவது திருத்தச் சட்டமூலத்தில் வழங்கப்பட்டுள்ள அபரிமிதமான அதிகாரங்களின் பிரதிபலனா கவே முதன்மை நீதியரசர் குற்றப் பிரேரணைக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலையேற்பட்டது என்று குறிப்பிட்டிருந்தவர். அத்துடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை ஆதரித்தவர். அரசாங்கத்தின் நாடாளுமன்றத் தெரிவுக்குவை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நிராகரித்தபோது அதைச் சரி என்றே குறிப்பிட்டிருந்தவர். தற்போது வடமா காணசபையின் முதலமைச்சராகப் பதவியேற்றுள்ளநிலையில்,

வடமாகாண சபை ஆளுநருக்கும் முதலமைச்சருக்குமான பனிப்போர் தொடங்கியுள்ளது. தமக்குரிய அதிகாரங்கள் தொடர்பிலும் மாகாணசபைக்கு வழங்கப்படவேண்டிய அதிகாரங்கள் குறித்தும் விக்னேஸ்வரன் பல கருத்துக்களை அண்மைக்காலமாக வெளியிட்டு வருகி றார். இதனால் வடமாகாண சபைக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான சர்ச்சைகள் மிகவும் தீவிரமடைந்துள்ளன. ஆளுநர் மாற்றம், இராணுவத் தலையீடு, காணி அபகரிப்பு, வர்த்தக நெருக்கடிகள், தொழில் என்று பல விடயங்களின் அடிப்படையில் இச்சர்ச்சை நீள்கிறது. இவை தொடர்பில் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்த முதலமைச்சர் விக்னேஸ்வரன் "வடக்கில் இராணுவத் தலையீட்டுக்கெதிராக குரல்கொடுக்க வேண்டியது தெற்கில் உள்ள சிங்கள மக்களின் கடமை, வடக்கிலுள்ள தமிழ் மக்கள் சிங்களவர்களை எதிர்க்கவில்லை, வடக்கு, கிழக்கு சிங்கள மயப்படுத்தப்படுவதையே எதிர்க்கிறார்கள், உள்நோக்கங்களுடன் தான் வடக்கில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர் என்பதில் சந்தேகமில்லை, எமது நிலங்கள், வர்த்தகம் அபகரிக்கப்பட்டுள்ளது. இராணுவ நிலைப்புக்கள் இன்னும் எவ்வளவு காலம் வடக்கில் இருக்கப்போகிறது என்ற நியா யமான கேள்வி தெற்கில் உள்ள மனிதாபிமானமுள்ள சாதாரண சிங்கள மக்களிடம் இருந்தும் எழ வேண்டும். வடக்கிற்கு சிங்களவர்கள் வருவதை நான் எதிர்க்கவில்லை. இராணுவத்தினரை வெளியேறும்படி கேட்பதால் சிங்களவர்கள் வடக்கிற்கு வரக்கூடாது என்பதும்எனது நிலைப்பாடு இல்லை" போன்ற விடயங்களை முதன்மைப்படுத்தியிருந்தார். இதே



வேளை வடமாகாண முதலமைச்சர் பதவி விலகும் அபாயம் இருப்பதாககூட ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் மனோகணே சன் அண்மையில் தெரிவித்திருந்தார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் தமிழரசுக்கட்சியின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது. தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை ஒரு கட்சியாக பதிவு செய்யும் நிலைப்பாட்டை சம்பந்தன் எப்போதுமே கொண்டிருக்கமாட்டார் என்று பரவ லாக பேசப்படுகிறது. இந்நிலையில் தமிழரசுக்கட்சியின் வேட்பாளராக தேர்தலில் நின்றவரே விக்னேஸ்வரன். இதனால் தமிழரசுக்கட்சிக்கும் இவருக்குமிடையிலான நெருக்கம் அதிகம். நீதித்துறை அனுபவத்தை மிகையாக பெற்றிருந்தாலும் அரசியல் செய்த அனுபவம் அவருக்கு பூஜ்யம் என்றே கூறவேண்டும். என்றாலும் பெரும்பான்மை அரசுடன் இவர் இரண்டறக் கலந்து வாழ்ந்தவர் என்பதும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

இன்று தமிழரசுக்கட்சியின் சம்பந்தன், மாவைசேனாதிராஜா, சுமந்திரன் போன்றவர்கள் அரசாங்கத்தின் கருத்துக்களுக்கு செவிசாய்க்கும் ஒரு போக்கினை கொண்டிருக்கின்றனர் என்று மக்கள் கருதுகின்றனர். இதனால் விக்னேஸ்வரனின் அரசி யலானது மென்போக்குடையதாக காணப்படுவதாக கூறப்படுகிறது. இந்நிலைப்பாடுதான் மீண்டுமொரு போர்ச்சூழலுக்குள் தமிழ்மக்களை கொண்டுசென்று விடுமோ என்கின்ற அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

ஏனெனில் மென்போக்கு அரசியல்பாணி என்பது இலங்கைக்குச் சாதகமானதொன்றல்ல. இலங்கை அரசியலைப் பொறுத்தவரையில் தமிழ்மக்களுக்கான அரசி யல் வரலாற்றின் பெரும்பாகமும் கடும்போக்கு அரசியலாகவே (ஆயுதப்போராட்டம் 32) இருந்து வந்திருக்கின்றது. இங்குள்ள பெரும்பான்மை இனத்தவர்களின் அரசி யலில் மதத்தின் ஆதிக்கம் மிகஅதி கம். பௌத்த பெருந்தேசியவாதிகளின் கைப்பிடிக்குள்தான் இன்றைய ஜனாதிபதி சிக்குண்டுள்ளார். பொது பலசேனா, இராவணபலய போன்ற பௌத்த பெருந்தேசியவாதிகளின் அரசியல் ஆதிக்கம் இதனை உணர்த்தும். என்னவோ ஜனாதிபதி யும் இந்நிலைப்பாட்டையே விரும்புகின்றார். அண்மையில் பௌத்த மதகுரு ஒருவர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுவார் என்ற செய்திகூட வெளியாகியிருந்தது. மற்றும் முஸ்லீம்களுக்கு எதிராக அண்மைக்காலமாக ஏற்ப்டுத்தப்பட்டுவரும் பிரச்சினைகள் அனைத்தையும் இவ்வமைப்புக்களே செய்துவருகின்றமை நாம் அறிந்ததே. இந்நிலையில் தமிழ் மக்களுக்கான இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயமாக இருந்தாலும சரி ஏனைய சாதாரணமான நிர்வாக விடயங்களாக இருந்தாலும் சரி மென்போக்கிலான வேண்டுகோளின் படி அவை சாத்தியமாகுமென்று நம்பமுடியாது. மாறாக ஆயுதப்போராட்டம்தான் இதற்கு சிறந்த தீர்வு என்றும் கூறிவிடமுடியாது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்ட அரசாங்கம் மத்தியில் ஆட்சி செய்கின்றது. அரசு நினைத்திருந்தால் சிறுபான்மை மக்களுக்கான தீர்வு திட்டத்தை முன்னரே நடைமுறைப்படுத்தியிருக்கலாம். ஆனால் ஒரு அச்சம் அரசை கௌவிப்பிடித்திருக்கிறது என்பது உண்மை. என்னவென்றால் 32 வருட காலமாக இலங்கை அரசுக்கு சிம்மசொப்பனமாக விளங்கியவர்கள் விடுதலைப்புலிகள். அவர்களை தனியாக நின்று அழித்துவிட முடியாததால்தான் வல்லரசுகளின் உதவியைப் பெற்று அவர்களை அழித்தது இலங்கை அரசு. ஆனா லும் ஒவ்வொரு தமிழ்க்குடிமகனையும் விடுதலைப் புலியாகவே இன்றும் அரசாங்கம் கருதுகிறது. அந்நிலைப்பாட்டில் இருந்து எப்போதும் அரசாங்கம் மாறப்போவதில்லை. அதுபோல தமிழ்மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக இருந்தாலும் சரி, சமூக ஆர்வலர்களாக இருந்தாலும் சரி, கல்விமான்களாக இருந்தாலும் சரி அல்லது சாதாரண ஒவ்வொரு தமி ழனாக இருந்தாலும் சரி தமிழ்த்தேசிய உணர்வு, இன உணர்வு, மொழி உணர்வு, மண் உணர்வு என உணர்வுகளால் உருவாக்கப்பட்டவர்கள். ஆயுதம் தாங்கிய விடுதலைப்புலிகளை உலக நாடுகள் பல அங்கீகரிக்காது விட்டிருந்தாலும் இலங்கைத் தமிழ்மக்களுக்கான ஆதரவு உலக நாடுகளிடமிருந்தும் புலம்பெயர் தமிழர்களிடமிருந்தும் அதிகமாக கிடைக்கிறது. இதனால் தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதனூடாக எங்கே இலங்கைத்தீவில் தமிழர்களின் ஆதிக்கம் அதிகரித்துவிடுமோ என்று அரசாங்கம் அஞ்சுகிறது.

இப்படியான ஒரு சூழலில் தான் வடமாகாணசபைத்தேர்தலில் முதலமைச்சு வேட்பாளராக விக்னேஸ்வரன் நிறுத்தப்பட்டார். அதனை ஜனாதிபதி கூட அப்போது வரவேற்றிருந்தார். முதலமைச்சருக்கான பதவிப்பிரமாணம் கூட ஜனாதிபதி முன்னிலையில்தான் நடைபெற்றிருந்தது. இதனைப் பலர் அன்று எதிர்த்திருந்தனர். ஜனாதிபதி யினுடனான சந்திப்புக்கள் கூட முரண்பாடுகளின்றி சுமுகமாகத்தான் நடக்கின்றன. இதனால் முதலமைச்சரின் அரசியல்போக்கில் பலம் இல்லை என்று கருதும் ஒரு சூழல் இன்று தோன்றியிருக்கிறது.

அதேவேளை மறுபுறம் அரசாங்கத்தை அச்சுறுத்துவதனாலோ அல்லது வற்புறுத்துவதனாலோ தமிழ் மக்களுக்கான உரிமைகள், தீர்வுகளை பெற்றுக்கொள்வது என்பது நடைமு றைச் சாத்தியமற்றது. அது முறையுமல்ல. அதனால்தான் விக்னேஸ்வரன், சம்பந்தன் போன்றோர் மென்மையான போக்கில் அரசியல் காய்நகர்த்தல்களை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் இவ்வணுகுமுறை மக்களால் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கப்படுகிறது. இதனால் தமிழ்மக்களுக்காக குரல்கொடுக்கும் இத்தலைமைகள் அரசாங்கத்திடம் சோரம்போய்விடுவார்கள் என்றோ அல்லது மீண்டும் ஒரு போர்ச்சூழல் உருவாகிவிடும் என்றோ நாம் கருதமுடியாது. அதேவேளை இந்நம்பிக்கையை விக்னேஸ்வரன் போன்றவர்கள் அவநம்பிக்கையாக மாற்றிவிடவும் முற்படக்கூடாது என்பதே முக்கியமானது. இதனால் சரியான தளத்தில் தமிழ் மக்களை வழிநடத்திச் செல்லவேண்டிய தார்மீகக் கடமை வடமாகாண சபையின் முதலமைச்சருக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் உண்டு. தலைவன் தடம்மாறினால் சேனைகளின் நிலை பரிதாபத்துக்குரியதாகிவிடும் என்பதை நம்தலைமைகள்உணர்ந்துகொண்டால் சரி.

சுழியோடி

# முள்ளிவாய்க்கால் பிரச்சினைக்கு முட்டுக்கட்டையாக இருந்தது இந்தியாவே

சிறிலங்காவில் விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையில் நடந்த இறுதிக் கட்டப் போரின்போது போர்நிறுத்தம் செய்யுமாறும், பேச்சுக்களில் ஈடுபடுமாறும் அனைத்துலக நாடுகள் கொடுத்த அழுத்தங்களில் இருந்து சிறிலங்காவைக் காப்பாற்றுவதில் இந்தியா முக்கிய பங்கு வகித்தது.

விக்கிலீக்ஸ் இணையம் மூலம் வெளியான அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தகவல் பரிமாற்ற குறிப்புகளில் இருந்து இந்த விவகாரம் அம்பலமாகியுள்ளது. சிறிலங்காப் படையினருக்கும்விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடந்த போரில் பொதுமக்கள் பலியாவது குறித்துக் இந்திய அரசு கவலை தெரிவித்தது. ஆனாலும் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையை சிறிலங்கா அரசு தொடர்வதை இந்தியா எதிர்க்கவில்லை. 2009 ஜனவரி மாதம் சிறிலங்கா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அவரது மாளிகையில் சந்தித்த அப்போதைய இந்திய வெளிவிவகார அமைச்சர்பிரணாப்முகர்ஜி, மனிதஉரிமைகள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதைத் தவிர, வேறு எந்த நோக்கத்துடனும் தான் கொழும்பு வரவில்லை என்று கூறியதாக, அமெரிக்கத் தூதுவரிடம் இந்தியத் தூதரக அதிகாரி தெரிவித்தார்.

போர் தொடர்வதை இந்தியா எதிர்க்கவில்லை என்று அவர் வெளியிட்ட அறிக்கை மூலமே தெளிவாகியிருக்கிறது. பிரணாப் முகர்ஜி வெளியிட்ட அறிக்கையில், 23 ஆண்டு மோதலுக்குப் பிறகு, சிறிலங்காப் படைகள் பெறுகின்ற வெற்றியானது சிறிலங்காவின் வடக்கிலும் ஏனைய பகுதிகளிலும் இயல்பு நிலையையை நிலை நாட்டுவதற்காக அரசியல் ரீதியாக ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் என்று கூறியிருந்தார்.

மத்திய அரசின் கூட்டணியில் இடம்பெற்றுள்ள தி.மு.கவின் நெருக்குதலால் 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மட்டும், போரைத் தாற்காலிகமாக நிறுத்துமாறு சிறிலங்கா அரசை வலியுறுத்துவதற்காக முயற்சிகளை இந்தியா மேற்கொண்டது. அதன் பிறகு வேறெந்த தருணத்திலும் சிறிலங்காவில் போர் தொடர்வதை இந்தியா தடுக்கவில்லை. 2009 ஏப்ரல் 15ஆம் திகதிஅமெரிக்கத் தூதரக அதிகாரி ஒருவரை, அப்போதைய இந்திய வெளியுறவுச் செயலரும், தற்போதைய தேசிய பாதுகாப்பு ஆலோசகருமான சிவசங்கர் மேனன் சந்தித்தபோது, மோதலுக்குத் தீர்வு காண்பதற்காக ஐ.நா. சபை தனது பிரதிநிதியை அனுப்புவதை சிறிலங்கா அரசாங்கம் விரும்பவில்லை என்று தெரிவித்தார். மேலும், விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சுக்களில் ஈடுபடுவதற்கும், போர்நிறுத்தத்துக்கும் சிறிலங்கா அரசு தயாராக இல்லை என்றும் சிவசங்கர் மேனன் கூறியுள்ளார்.

அனைத்துலக நாடுகளின் கோரிக்கைகள் அனைத்தையும் புறக்கணிக்காமல், குறைந்தபட்சம், விடுதலைப் புலிகளின் முக்கியத் தலைவர்கள் அல்லாத மற்றவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்குவது குறித்துப் பரிசீலிக்குமாறு சிறிலங்கா அரசுக்கு இந்தியா யோசனை கூறியதாகவும் சிவசங்கர் மேனன் அமெரிக்க அதிகாரியிடம் கூறியிருக்கிறார்.

அதேவேளை, புலிகளின் முக்கிய தலைவர்கள் யார், ஏனைய தலைவர்கள் யார் என்பதை எப்படி அடையாளம் காண்பது என்ற கேள்வியும் எழுந்ததாக மேனன் கூறியிருக்கிறார். பேச்சுக்களுக்கான வாய்ப்பு மிகவும் குறைவாக உள்ள அதேவேளை, விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்தும் முரண்பட்ட தகவல்கள் வருவதாகவும், பிரபாகரனுக்காகப் பேசவல்லவர் யார் என்று தெரியவில்லை என்றும், நிலைமையை அவர் உணர்ந்திருக்கிறாரா என்பது தெரியவில்லை என்றும் சிவசங்கர் மேனன் கூறியதாக விக்கிலீக்ஸ் தகவல் தெரிவிக்கிறது.

இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் நிலையில், சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் பேச்சுக்களுக்கு இந்தியா முன்முயற்சி எடுப்பதற்கான வாய்ப்புகள் இல்லை என்றும் சிவசங்கர் மேனன் கூறியுள்ளார். 2009 மே 6, 7ஆம் திகதிகளில்,





சிறிலங்காவுக்கான பிரித்தானியாவின் சிறப்புத் தூதுவர் டெஸ் பிறவுண் இந்திய வெளிவிவகாரச் செயலர் சிவசங்கர் மேனன் மற்றும் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணனை ஆகியோரைச் சந்தித்தார். அப்போது, சிறிலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கும் நிலையில் உள்ளதால், போரை நிறுத்துவதற்கான சாத்தியங்கள் இப்போது இல்லை என்று இந்திய அதிகாரிகள் இருவரும் கூறினார்.

அப்பாவி மக்களுக்கு ஏற்பட்டுள்ள அவலம் குறித்து இந்திய அதிகாரிகள் கவலை தெரிவித்தாலும், போருக்குப் பிறகு தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்க சிறிலங்கா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சம்மதிக்க வைக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் இருந்ததாக பிரித்தானிய சிறப்புத் தூதுவர் டெஸ் பிறவண் அமெரிக்கத் தூதரக அதிகாரியிடம் தெரிவித்திருக்கிறார். அத்துடன் ஐ.நா. பாதுகாப்பு சபை கூட்ட நிகழ்ச்சி நிரலில், சிறிலங்கா பிரச்சினையையும் சேர்த்து, அறிக்கை வெளியிட்டால் சிறிலங்காவுக்கு எதிராக ஐ.நா குரல் கொடுத்தால் அது எதிர்விளைவுகளைத் தான் ஏற்படுத்தும் என்று பிரித்தானிய சிறப்புத் தூதுவரிடம் சிவசங்கர் மேனனும், எம்.கே.நாராயணனும் கூறியுள்ளனர். ஐ.நா பாதுகாப்பு சபை அல்லது ஐ.நா மனிதஉரிமைகள் பேரவை மூலம் அழுத்தம் கொடுப்பதை விட, இராஜாங்க ரீதியான நடவடிக்கைகளே பயனுள்ளதாக இருக்கும் என்று சிவசங்கர் மேனன் அமெரிக்கத் தூதரக அதிகாரியிடம் கூறியதாகவும் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

இவ்வாறான நிலையில் பிரபாகரன் ரஜீவ் காந்தியை கொல்வதற்கான அனைத்து திட்டங்களையும் தீட்டினார் என்பதற்காக தமிழ் மக்களின் போராட்டத்தை மழுங்கடிக்கும் நோக்கில் இலங்கை அரசிற்கு பாரிய ஒத்துழைப்புக்கள் வழங்கியது. போரியல் வரலாற்றில் விடுதலைப்புலிகள் பலம் வாய்ந்த ஒரு அமைப்பாக செயற்பட்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கவிடயமாகும். மேலும் இந்தியா ஏன் இப்போராட்டத்தை மழுங்கடிக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டிற்கு வந்தது? ஒரு விடயத்தைப் பார்க்கின்றபொழுது, தமிழ் மக்கள்போராட்டத்தில்அக்கறைகொண்டு பிரபாகரன் ஏனைய இயக்கங்களை வளர்த்தெடுத்ததும் இந்திய அரசே.

இதேபோன்ற ஒரு சூழ்நிலை இந்தியாவின் தமிழகத்தில் உருவாகிவிடும் என்பதற்காக இந்தியஅரசு முழுமூச்சுடன் ஈழத்தமிழர்களின் பிரச்சினையில் கண்சாடையாக நடந்துகொண்டது. விடுதலைப்புலிகளை அழித்தொழிக்கும் நடவடிக்கைக்காக இந்தியாவிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட உயர் இராணுவ அதிகாரிகள், கொமாண்டோக்கள், காலாற்படைவீரர்கள் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் பலர் நடைபெற்ற இறுதிப்போரில் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இவை திரைமறைவில் நடந்தவை. தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகளை ஆதரித்தும் தமிழ் மக்களை ஆதரித்தும் பலதரப்பட்ட போராட்டங்கள் நடந்தது. மக்கள் தீக்குளித்தனர். வைகோ, நெடுமாறன், திருமாவளவன் இன்னும் பலர் ஆக்ரோசமான குரல்களை எழுப்பினர். உண்ணாவிரதங்களை மேற்கொண்டிருந்தனர். இவை அனைத்தும் இறுதியில் பயனற்றதாகவே அமையப்பெற்றது.

இது இப்படியிருக்க இந்தியாவை நம்பி தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு இலங்கையின் தமிழ்மக்களின் பிரச்சினைக்கு இந்தியத் தலையீடு இல்லாமல் எவ்வித தீர்வும் காண முடியாது என்று அன்றிலிருந்து இன்றுவரை பேசிக்கொண்டிருக்கின்றன. அதைவிட மஹிந்த ராஜபக்ஷவிடம் பேசி தமிழ்மக்களுக்கான தீர்வை ஏன் பெற்றுக்கொள்ளமுடியாது என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளன. 30 வருட காலம் இந்தியாவை நம்பி ஏமாந்துபோன கதையாய் இருக்கின்றது தமிழருடைய நிலைப்பாடு. தமிழ்மக்களுக்காக குரல் கொடுக்கும் தமிழ் அரசியல் வாதிகளின் குரல்வளை நசுக்கப்பட்டுவருகின்றது.

இதற்கு காரணம் ஒரு பக்கச் சார்பாக எமது அரசியல் வாதிகள் செயற்படுத்துவதுதான். மஹிந்த ராஜபக்ஷவின் அரசினைப் பொறுத்தவரையில் தமிழர்க்கான முழுமையான தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதில் விருப்பமில்லை. அவர் விரும்பினாலும் அவரை சூழவுள்ள சிங்கள இனவாதக் கட்சிகள் விரும்புவதில்லை. இலங்கையில் திம்பு முதல் டோக்கியோ வரையான சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது கூட (Peace Without Process) இவ்வினவாதக்கட்சிகள் குழப்பத்தினை ஏற்படுத்திக்கொண்டே இருந்தன. வேண்டுமென்றே மாவிலாறு நீர் பிரச்சினை ஏற்படுத்தப்பட்டது. தமிழீழ நிர்வாகக் கட்டமைப்புக்கள் ஒழுங்காக செயற்பட்டுக்கொண்டிருந்த காலமது. இவ்வாறு விடுதலைப்புலிகளின் போக்கு சென்றுகொண்டிருக்குமாகவிருந்தால் அது தனக்கு தலையிடியாக அமைந்துவிடும் என்று மஹிந்தவிடம் பேசிக்கொண்டிருந்தது. பிரபாகரனை நம்பி இடைக்கால நிர்வாகத்தினை கையளிப்பீர்களாவிருந்தால் இறுதியாக தலைநகரம் அவரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிடும் என்ற பீதியை கட்டவிழ்த்துவிட்டது இந்திய அரசு. தமிழ் நாட்டினைத் தவிர தமிழ்மக்களுக்கான ஆதரவோ பிரபாகரனுக்கான ஆதரவோ இந்தியாவின் ஏனைய மாநிலங்களில் இருந்திருக்கவில்லை.

அதேபோன்று தமிழ் மக்கள் கொண்டிருந்த ஒற்றுமை இலங்கையின் தமிழ் மக்கள் போர்ச்சூழல் காலத்தில் கொண்டிருக்கவில்லை. ஆனால் இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அர சின் அராஜகங்களை பார்க்கின்ற பொழுது பிரபாகரனின் போராட்டம் சரியானதே என அரசியல்வாதிகளும் மக்களும் கருத்துத்தெரிவிக்கின்றனர். இந்தியஅரசு நினைத்திருந்தால் வடமராட்சியில் நடத்தப்பட்ட operation liberation என்ற போர் நடவடிக்கையில் பிரபாகரனை காப்பாற்ற மொராச் விமானம்மூலம் காப்பாற்றியது. அன்று பிரபாகரனைக் காப்பாற்றிய இந்திய அரசாங்கத்திற்கு இன்று ஏன் அவரைக் காப்பாற்ற முடியவில்லை என்றகேள்விக்கு மேற்குறிப்பிட்ட விடயங்கள் காரணங்களாக அமைகின்றன. மற்றுமொரு காரணம் என்னவென்றால் இந்தியாவிற்கு முட்டுக்கட்டையாக விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் அமைந்துவிடுவார்களோ என்கின்ற அச்சம் இருந்துவந்தது.

ஆசிய பிராந்தியத்தில் தனது சர்வாதிகாரத்தை நிலைநிறுத்துவதில் விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் தமது நிலைகளின் மீதும் தாக்குதல் நடத்துவார்கள் என்ற ஐயப்பாட்டினால் அவர்களை முற்றாக ஒழிக்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்தது. எந்தவொரு ஆயுதக்குழுக்களும் கடல் வான் தரை என முப்படைகளையும் தன்னகத்தே கொண்ட வரலாறு இல்லை. இவ்வாறு முப்படைகளையும் நிர்வாகக்கட்டமைப்புக்களையும் கொண்ட படை ஒரு தமிழீழமாக ஒரு தனிநாடாகவோ அமைக்கும் ஒரு இக்கட்டான சூழ்நிலை இலங்கை அரசிற்கு இருந்துவந்தது.

அவ்வாறு இருந்துவருகின்ற பொழுது இந்த சிறிய தீவிற்குள் இன்னுமொரு நாடா என்ற பிரச்சினை எழத்தோன்றியது. ஆகவே இந்தியாவுடன் இணைந்து மந்திர தந்திர ஆலோசனைகளில் இலங்கையரசு ஈடுபட்டது. பிரபாகரனுடன் இணைந்திருந்த கருணா பிரிந்துசென்றது ஒரு காரணமாக இருந்தாலும் அவற்றையும் சீர்செய்துகொண்டு பிரபாகரன் தமிழீழத்திற்கான ஒரு போராட்டத்தை முன்நின்று நடத்தி வந்தார். அதையும் மீறி இந்தியா தனது சர்வாதிகாரத்தை விடுதலைப்புலிகள்மீதுதிணித்துபோரினை முடிவுக்கு வர இலங்கையரசுடன் இணைந்து செயற்பட்டது. முள்ளிவாய்க்கால் அழிவின்போது மக்களையும் அங்கு ஏற்படுகின்ற பொருட்சேதங்களையும் பார்க்காத இந்திய அரசாங்கம் இனி தமிழ்மக்கள் நலனில் அக்கறைகொள்ளவேண்டிய அவசியமில்லை.

இதனோடு தமிழ் மக்கள் ஒன்றினைப் புரிந்துகொள்ளவேண்டும். இந்தியஅரசு தனது சுயநலத்திற்காகவே இலங்கை மக்கள் மீது அக்கறை கொள்வதாக சர்வதேச சமூகத்தின் முன் வெளிப்படுத்துகிறது தவிர வேறு ஒன்றுமில்லை எனலாம்.

**மறவன்**

# மலையக வீடமைப்பின் முன்னோடி போராளி அமரர் பெ.சந்திரசேகரன்

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபக தலைவர் பெ.சந்திரசேகரன் எம்மைவிட்டு பிரிந்து மூன்றாண்டுகள் கடந்துவிட்டன. 2010ஆம் ஆண்டு, வருடத்தின் ஆரம்ப நாளான ஜனவரி முதலாம் திகதியே காலன் அவரை மலையக மக்களிடமிருந்து பிரித்துவிட்டான். அவரது சிரார்த்த தினமென்பது ஒவ்வொரு ஆண்டும் புத்தாண்டொன்று பிறக்கும் நாளன்றே அனுஷ்டிக்கப்படுகின்றது. அந்த வகையில் அவரது 4ஆவது சிரார்த்த தினத்தை (01.01.2014)நினைவு கூறும் முகமாக அவரின் நினைவலைகளை மீட்டும் வகையில் இந்த கட்டுரை பிரசுரமாகின்றது.

1948ஆம் ஆண்டிற்குப் பிந்திய சுதந்திர இலங்கையிலும், அதன் முன்னரும் இன்று மலையக தமிழ் தேசிய இனம் என்று அடையாளப்படுத்துகின்ற "மலையக தமிழ் தேசியம்" 1960ஆம் ஆண்டுகள் வரை அண்மைக்கால இந்திய வம்சாவளித் தமிழர்கள் (Tamils of Recent Indian Origin) என்ற அடையாளத்தைக் கொண்டே (பெயர் கொண்டே) அழைக்கப்பட்டனர். அவர்களை பிரதிநிதித்துவப்படுத்திய இலங்கை இந்திய காங்கிரஸ் என்ற அரசியல் கட்சியும், இந்திய வம்சாவளியினர் என்ற அடையாளத்தை பிரதிபலிக்கும் வகையிலேயே அன்று இலங்கை இந்திய காங்கிரஸ் என்ற அரசியல் கட்சியின் பெயரில் தோற்றம் பெற்றது.

மலையக தமிழ் மக்களின் அன்றைய பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கூட இந்த இலங்கை, இந்திய காங்கிரஸ் என்ற அரசியல் கட்சியின் ஊடாகவே பாராளுமன்றத்தில் நிலைநாட்டப்பட்டது. ஆனால் மலையக வரலாற்றில் இந்த நிலைமைகள் மாறி மலையகத்தை இந்த இந்திய வம்சாவளி தமிழர்கள் தமது பாரம்பரிய தாயகமாக மாற்றியமைத்தனர். இந்தியாவோடு இருந்த தொடர்புகள் படிப்படியாக குறைந்து இந்த மலையக மண்ணையே தமது நிரந்தர வாழிடமாக மாற்றி, "மலையகம்" என்ற மண் சார்ந்த மலையக தமிழர் என்ற அடையாளத்தைப் பெற்றனர்.

இரண்டாயிரம் அடிகளுக்கு மேற்பட்ட இந்த மலையகமே தமது மண் என்ற வகையில் மலையகத்தில் பல இயக்கங்கள் "மலையகம்" என்ற அடையாளத்தில் தோன்ற ஆரம்பித்தன.மறைந்தகண்டி அசோகா வித்தியாலய ராஜன், இரா.சிவலிங்கம் போன்றோர் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட மலையக நல்வாழ்வு வாலிபர் மன்றம், மலையக இளைஞர் முன்னணி இன்னும் மலையக மக்கள் இயக்கம், மலையக வெகுஜன இயக்கம், மலையக ஐக்கிய இளைஞர் பேரவை போன்ற அமைப்புக்களும், மலைப்பொறி, மலையகம், மலைமுரசு போன்ற பத்திரிகைகள் 60ஆம், 70ஆம் ஆண்டுகளில் தோன்றியமை, மலையக சமூக உருவாக்கத்தின் வெளிப்பாடாகவே அமைந்தது.


இந்த மலையக சமூக உருவாக்கத்தின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவராக, முன்னோடியாக இரா.சிவலிங்கம் திகழ்ந்தார். மலையகத்தில் கல்வி கற்றவர்களை அடிப்படையாகக் கொண்டு இரா.சிவலிங்கம் தலைமையில் "மலையக தமிழ்த் தேசிய வாதம்" ஊற்றெடுத்தாலும் அதனை, மலையக மண்ணையும், அங்கு வாழும் பெரும்பான்மையான தொழிலாளர் வர்க்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு "மலையகதேசிய வாதத்தை" மலையக தொழிலாளர் வர்க்கத்தின் இன்னொரு வரலாற்று கட்டத்திற்கு மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் முன்னெடுத்தார். இப்படியான ஒவருவர் எம்மத்தியிலிருந்து பிரிந்து மூன்று ஆண்டுகள் கடந்துள்ளது.

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபக தலைவரும், மலையகத்தில் தோட்டப்புற வீடமைப்பு, மின்சாரம், சமூர்த்தி கிராம அலுவலர் உத்தியோகம் போன்ற விடயங்களின் ஆரம்ப கர்த்தாவாகவும் விளங்கிய பெ.சந்திரசேகரன் தலைமை மலையகத்தில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. "கள்ளத்தோணி" என்றும் "நாடற்றவர்கள்" என்றும் இருந்த அவல நிலைமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து மலையக மக்கள் சமூக ரீதியாக முகம் கொடுத்த அடக்கு முறைகளுக்கெதிரான போராட்டங்களில் ஈடுபட்டு ஒரு முன்னணிப் போராளியாக திகழ்ந்தார்.

1986ஆம் ஆண்டு தலவாக்கலை தைபூச திருவிழாவின் போதும் அதன் பின் இந்திய கடவுச்சீட்டுகளை எரித்தமை, 2000 ஆம் ஆண்டு "பிந்துனுவெவ" சம்பவத்தின் போதும், மலையக மக்களுக்காக போராட்டங்களில் முன்னின்று செயற்பட்டமை காரணமாக சிறை செல்ல வேண்டி ஏற்பட்டது. இந்த நிகழ்வுகள் சந்திரசேகரன் எந்தளவு போராட்டங்களில் முன்னணிவகித்தார் என்பதையும் மலையக தமிழ் தேசிய வாதத்தை எந்தளவு உயிர் துடிப்போடு முன்னெடுத்தார் என்பதையும் கட்டியம் கூறி நிற்கின்றது. இன்று மறைந்த தலைவர் சந்திரசேகரன் எம்மத்தியில் இல்லாவிட்டாலும் அவரின் போராட்ட நினைவுகள் மலையக தமிழ் மக்கள் மத்தியில் என்றும் பசுமையாக நிலைத்து நிற்கும் என மலையக மக்கள முன்னணியின் தலைவர் அமரர் பெ.சந்திரசேகரன் வடகிழக்குத் தமிழத் தேசியவாதப் போராட்டத்தையும், மலையக தமிழ் தேசிவாதப் போராட்டத்தையும் இருவேறான சமூகங்களின் தனித்துவமான போராட்டம் என மிகத் தெளிவாக அடையாளப்படுத்திய அதேவேளை, இரண்டு போராட்டங்களுக்கும் இரு சமூகங்களுக்கும் ஆதரவான தனித்துவமான வெவ்வேறான போராட்டங்களுக்காக சர்வதேச ரீதியிலும், தேசிய ரீதியிலும் குரல் கொடுத்த அதேவேளை, மலையக தமிழ் மக்களின் போராட்டங்களுக்காகவும், தேசிய ரீதியிலும், குரல் எழுப்பினார்.

குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களின் சம்பளவுயர்வு பிரச்சினையில் அவர் வீதியில் இறங்கி போராடவும் பின் நிற்கவில்லை. வடகிழக்குப் போராட்டத்திற்கு முக்கியத்துவம் குறைந்துவிட கூடாது அல்லது வேறு போராட்டங்களால் அப்போராட்டம் கரைந்து போய்விடக்கூடாது என்பதற்காக மலையக மக்கள் பிரச்சினை தொடர்பாக சில சிறுபான்மை தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் அடக்கி வாசிக்க முற்படும் நேரம் மலையக மக்கள் முன்னணி தலைவர் பெ.சந்திரசேகரன் மலையக தமிழ் மக்களின் போராட்டத்திற்கு முன்னுரிமை அளித்த அதே வேளை வடகிழக்கு தமிழ் மக்களினதும் போராட்டத்திற்கு குரல் கொடுத்து சிறுபான்மை மக்கள் தொடர்பான போராட்டங்களில் தமது நிலைப்பாட்டை தெளிவாக காட்டியுள்ளார். அது மாத்திரமன்றி பெரும்பான்மை சிங்கள மக்கள் பிரச்சினை தொடர்பாகவும் அவர் தேசிய ரீதியான போராட்டங்களில் பங்குபற்றியுள்ளார்.

தவிர மலையகத்தில் பல்கலைக்கழகம் ஒன்றை ஸ்தாபித்தல் மலையகத்திலிருந்து தெரிவாகும் பட்டக் கல்வி பெறும் பொருளாதார வசதியற்றவர்களுக்கு வசதியளிக்க கல்வி நம்பிக்கை நிதியம் ஒன்றை ஆரம்பித்தல், தேசிய அடையாள அட்டைகள் இன்றி இருக்கும் மலையக தோட்டப்புற மக்களுக்கு தேசிய அடையாள அட்டைகள் வழங்கும் நடமாடும் சேவை ஆரம்பித்தல், மலையக தோட்டப்புற மக்களின் வறுமையை ஒழிக்கும் கட்டமைப்பு திட்டங்களை ஆரம்பிக்கும் திட்டங்கள், பத்தனை, சிவனொளிபாத கல்லூரியில் சமூக அபிவிருத்தி தொடர்பாக டிப்ளோமா பாடநெறி ஒன்றை ஆரம்பிக்க தேவையான நடவடிக்கை எடுப்பது, மலையக தோட்டப்புற பகுதிகளில் பிரதேச செயலகங்களை ஆரம்பிப்பது, மலையக தோட்டப்புற பகுதிகளில் கலாசார மற்றும் சமூக நடவடிக்கைகளை விருத்திசெய்வது, தோட்டப்புற பகுதிகளில் சமூகத்தை முன்னெடுக்கும் அமைப்புகள் ஆரம்பிப்பது, தோட்டப்புற பகுதிகளில் ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களின் நடவடிக்கைகளை விருத்தி செய்வது, மலையக தோட்டப்புற மாணவர்களை அதிக அளவில் பாகுபாடின்றி பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக் கொள்வது என பல்வேறு திட்டங்களை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



தமிழ் மக்கள் மத்தியில் மலையகம், வட கிழக்கு என்று வேறுபாடுகள் இருக்க முடியாது. சகல மக்களும் சமமாக சமாதானத்துடன் வாழும் ஒரு பிரஜைகளாக இருக்க வேண்டுமென விரும்பினார். நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் மலையக தோட்டப்புற மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வந்தமையை எவராலும் மறுதலிக்க முடியாது.

நாடு சுதந்திரம் பெற்று 60 வருடங்களை கடந்துள்ள போதிலும் இன்றும் இம் மக்கள் அடிமைகளாக லயன் வாழ்க்கையில் நசுக்கப்பட்டிருப்பதை அகற்றி தோட்டப்புற மக்களுக்கு ஒரு சுமுகமான வாழ்க்கையை உருவாக்க பிரதான அரசியல் அலையில் சேர்ந்து உண்மையாக பாடுபட்டு போராடியவர் அமரர் சந்திரசேகரன். ஆகவே மலைய மக்கள் முன்னணி தலைவர் பெ.சந்திரசேகரன் மறைந்து மூன்றாண்டுகள் கடந்துவிட்டாலும் குறிப்பாக மலையக தமிழ் மக்கள் தொடர்பாகவும், அதேநேரத்தில் வடகிழக்கு தமிழ் மக்கள் கடைபிடித்த கொள்கைகள் காலத்தால் அழிக்க முடியாதவை.

அ.லோறன்ஸ்,
செயலாளர் நாயகம் ம.ம.மு

# பிராந்தியச் செய்திகள்



## இலங்கையில் மிதக்கும் புத்தகசாலை




உலகில் மிகப்பெரிய மிதக்கும் புத்தகச்சாலை எனக் கூறப்படும் லோகோஸ் ஹோப் என்ற கப்பல் இன்று முதல் (27)எதிர்வரும் ஜனவரி 7ஆம் திகதி வரை காலி துறைமுகத்தில் நங்கூரமிட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மிதக்கும் புத்தகச்சாலை 09 மாடிகளை கொண்டதுடன் 132 அடி நீளமானது. இதுவரை 164 நாடுகளில் ஆயிரத்து 400 துறைமுகங்களில் இந்த கப்பல் நங்கூரமிட்டுள்ளதுடன் இதில் 45 நாடுகளை சேர்ந்த 400 பேர் தொண்டர் ஊழியர்களாக பணியாற்றி வருகின்றனர். ஜேர்மனியில் பதிவுசெய்யப்பட்டுள்ள தொண்டர் அமைப்பின் கீழ் இந்த கப்பல் செயற்பட்டு வருகிற மேற்படி கப்பலில் 5 ஆயிரம் புத்தகங்களை கொண்ட நூலகம் ஒன்றும் உள்ளது.

காலி துறைமுகத்தில் நங்கூரமிட்டிருக்கும் இந்தக் கப்பலை பார்வையிடச் செல்வோரில் 12 வயதுக்கும் மேற்பட்டவர்களிடம் 100 ரூபாவைக் கட்டணமாக அறவிடவும் லோகோஸ் ஹோப் கப்பலின் அதிகாரிகள் எதிர்பார்த்துள்ளனர்.

கிழமை நாட்களில் காலை 10 முதல் மாலை 4 மணி வரையும்,சனிக்கிழமை காலை 10 முதல் இரவு 8 மணி வரையும்,ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 2 மணி முதல் இரவு 8 மணி வரையும் கப்பலை பார்வையிட முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. புது வருடத்தை முன்னிட்டு ஜனவரி முதலாம் திகதி மட்டும் கப்பலை பார்வையிட முடியாது என தெரிவிக்கப் பட்டுள்ளது.

## யாழில் இந்து ஆலயங்களில் நிர்வாக முரண்பாடுகள் அதிகம் - யாழ் அரச அதிபர்



யாழ்ப்பாணத்திலுள்ள பல இந்து ஆலயங்களில் தோன்றியுள்ள நிர்வாக முரண்பாடுகள் கவலையளிப்பதாக மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார். இத்தகைய முரண்பாடுகள் குறித்து மாவட்டச் செயலகத்துக்கு அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஆலய நிர்வாக முரண்பாடுகள் குறித்து அதிகளவான முறைப்பாடுகள் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கின்றன. எந்தவொரு நிர்வாகங்களுக்கிடையிலும் முரண்பாடுகள் ஏற்படுவது நியதியே. அதுகுறித்து நிர்வாகங்களுக்கிடையிலையே பேசித் தீர்க்கப்பட வேண்டும். ஆலயத்துக்கு வெளியே முரண்பாடுகள் வரக்கூடாது.

ஆலங்களிற்கென தனித்துவமான சிறப்புக்களும் புனிதமும் இருக்கின்றது. அவற்றை பாதுகாத்து பேணுகின்ற வகையில் பொறுப்புடன் செயற்பட வேண்டிய தார்மீகப் பொறுப்பு எம்மிடத்தே உள்ளது. மேலும் கலாசார பண்புடைய சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பிலுள்ள ஆலய நிர்வாகங்கள் தமக்குள் மோதிக்கொள்ளாது சமூகத்தைக் கட்டியெழுப்பவேண்டும். ஆலயங்களின் நிர்வாகங்கள் மக்களுடைய கருத்துக்களையும் உள்வாங்கி நீதி, நியாயத்துடன் செயற்பட்டால் எந்தப் பிரச்சினைகளும் ஏற்படாது. ஆலயங்கள் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையும் பாதுகாக்கப்படும் என்றார்.

## இரு நாட்களில் 517 பேர் கைது



மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளை கைது செய்யும் விசேட பொலிஸ் சுற்றிவளைப்புகளின் போது கடந்த 48 மணித்தியாலங்களில் 517 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் மேல் மாகாணத்திலேயே அதிகளவானர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்தில் இதன்போது 234 பேர் கைதாகியுள்ளனர். இது தவிர விபத்துக்கள் காரணமாக 546 பேர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 201 பேர் தொடர்ந்தும் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருவதாக தேசிய மருத்துவமனையின் பேச்சாளர் தெரிவித்தார்.

வீதி விபத்துக்களில் சிக்கிய நிலையில் 114 பேர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதுதவிர கேளிக்கை மற்றும் வாண வேடிக்கை விபத்துக்கள் காரணமாக காயமடைந்த இரண்டு சிறார்களும் இதன்போது சிகிச்சை பெற்று வருவதாக பேச்சாளர் குறிப்பிட்டார்.


## அக்கரைப்பற்று மக்கள் வீதியில் சமைத்து உண்டு ஆர்ப்பாட்டம்



சுனாமி அழிவு இடம்பெற்று 9 வருடங்கள் கடந்தும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென கட்டி முடிக்கப்பட்ட நுரைச்சோலை வீடுகளைக் வழங்காமல் உள்ளதை எதிர்த்தும் அந்த வீடுகளை தங்களிடம் வழங்கக் கோரியும் பாதிக்கப்பட்ட அக்கரைப்பற்று மக்கள் (26) வீதியில் சமையல்களை சமைத்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரினாலும், அரசியல்வாதிகளினாலும் காலத்திற்குக் காலம் விரைவில் வீடு தருவோம் என வாக்குறுதிகள் வழங்கப்பட்டும் இன்று வரை வழங்கப்படவில்லை. இனிமேல் யாரையும் நம்பி பலனில்லை என்பதால் வீதிகளில் இறங்கிப் போராடுவதற்கு முடிவு செய்துள்ளோம்.

இந்தப் போராட்டம் நாளை முதல் பெரி யளவில் முன்னடுக்கப்படும் எனவும் மக்கள் கருத்துத் தெரிவித்தனர். வீதியில் சமைத்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இடத்திற்கு வருகை தந்த அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினரும், பொதுப் பணிகள் அமைப்பின் தலைவருமான எஸ்.எல்.முனாஸிடம் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களின் ஆதங்களை வெளிப்படுத்தினர்.


## ஹம்பாந்தோட்டைக்கு முதல் பயணிகள் கப்பல்



இலங்கையின் ஹம்பாந்தோட்டை மாகம் ருகுனுபுர மஹிந்த ராஜபக்ச துறைமுகத்துக்கு முதல் தடவையாக பயணிகள் கப்பல் ஒன்று சென்றுள்ளது. கடந்த 21 ஆம் திகதின்று இந்த துறைமுகத்துக்கு சென்ற இந்த கப்பலே துறைமுகம் திறக்கப்பட்ட பின்னர் சென்ற முதலாவது கப்பலாக இருந்தது.

எம்வி வேயேஜர் என்ற இந்த கப்பலில் 365 பயணிகளும் 224 பணியாளர்களும் பயணித்தார்கள். இந்த கப்பல் ஹம்பாந்தோடை துறைமுகத்தில் சுமார் 11 மணித்தியாலங்கள் தரித்திருந்தது. இந்த கப்பல் துபாய், ஓமான், இந்தியாவின் ஊடாகவே ஹம்பாந்தோட்டைக்கு சென்றது. இதற்கு முன்னதாக இந்தக்கப்பல் டிசம்பர் 18 ஆம் திகதியன்று கொழும்பு துறைமுகத்துக்கு சென்று இரண்டு நாட்கள் அங்கு நங்கூரமிட்டிருந்தது.

## காதலியின் கழுத்தை அறுத்த காதலன் - புஸல்லாவவில் சம்பவம்



காதலை புறக்கணித்ததால் ஆத்திரமடைந்த காதலன் அதிகாலை 4 மணியளவில் காதலியின் கழுத்தை அறுத்து விட்டு கிணற்றில் குதித்து தற்கொலை செய்ய முயற்சித்த காதலனை பிரதேச மக்கள் பிடித்து புஸல்லாவ பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.கைது செய்யப்பட்ட நபர் நாவலப்பிட்டி நீதவான் எல். கே. மஹிந்த முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தணமல்வில பிரதேசத்தை சேர்ந்த இந்த நபர் இராணுவத்தில் பணியாற்றி விலகியவர் எனவும் கடந்த ஒரு வருடமாக கம்பளை புஸல்லாவ டெல்டா கெமுனுபுர பிரதேசத்தை சேர்ந்த 20 வயதான பெண்ணை காதலித்து வந்துள்ளார். இருவருக்கும் இடையில் பொருத்தம் இல்லை என கருதி பெண் காதலை புறக்கணித்துள்ளார். இதனால் காதல் தொடர்பை துண்டித்து கொள்வோம் என அந்த பெண் காதலனிடம் கூறியுள்ளார்.

இந்த நிலையில் இது குறித்து பேச காதலன் தணமல்வில பிரதேசத்தில் இருந்து புஸல்லாவ பகுதிக்கு வந்துள்ளார். நேரம் பிந்தியதால், இந்த நபரை அன்றிரவு வீட்டில் தங்கி விட்டு காலையில் தணமல்வில திரும்ப பெண் வீட்டார் இடமளித்துள்ளனர்.

இந்த நிலையில் அதிகாலை 4 மணிக்கு பெண்ணை அழைத்து மீண்டும் காதல் பற்றி பேசியுள்ளார். பெண் காதலுக்கு எதிர்ப்பை வெளியிட்டதால், ஆத்திரமடைந்த காதலன் கத்தி ஒன்றை எடுத்து பெண்ணின் கழுத்தை அறுத்துள்ளார். இதனையடுத்து வீட்டுக்கு அருகில் இருந்த கிணற்றில் குதித்துள்ளார். வீட்டில் உள்ளவர்களும் கிராமவாசிகளும் இணைந்து கழுத்து அறுக்கப்பட்ட பெண்ணை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதுடன் கிணற்றில் விழுந்த நபரை மீட்டு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். ஆபத்தான நிலையில் இருக்கும் பெண் புஸ்ஸலாவ. வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

## மன்னார் மனிதப் புதைகுழி மீண்டும் தோண்டப்படுகிறது




மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள மனித புதைகுழி மீண்டும் தோண்டப்படவுள்ளது. மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் மற்றும் அனுராதபுரம் சட்ட வைத்திய நிபுணர் வைத்திய ரெட்ண ஆகியோர் முன்னிலையில் குறித்த மனித புதைகுழி தோண்டப்படவுள்ளது.

இதன் போது மனித புதைகுழி காணப்படுகின்ற பகுதியைச் சுற்றியுள்ள வீதிகள் உடைக்கப்பட்டும் காடுகள் வெட்டப்பட்டும் மனித புதைகுழி தோண்டப்பட்டு மனித எச்சங்கள் மீட்கப்படவுள்ளன. கடந்த வெள்ளிக்கிழமை 20ஆம் திகதி மன்னார் திருக்கேதீஸ்வரம் மாந்தை சந்தியில் இருந்து சுமார் 70 மீற்றர் தொலைவில் நீர் இணைப்பிற்காக குழியொன்று தோண்டிய போது மூன்று மண்டையோடுகளும், மனித எலும்புகளும் மீட்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து மன்னார் நீதிவானின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட நிலையில் குறித்த மனித புதைகுழி மன்னார் நீதிவான் முன்னிலையில் கடந்த சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரு தினங்களில் தோண்டப்படது.

இதன் போது சுமார் 10 இற்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் தற்போது குறித்த பகுதிக்கு பொலிஸாரினால் பலத்த பாதுகாப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. நீதிவானின் உத்தரவிற்கமைவாக நாளை சனிக்கிழமை சட்ட வைத்திய நிபுணர் முன்னிலையில் குறித்த மனித புதைகுழி தோண்டப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




தினப்புயல் சினிமா




## நட்புக்குப் பெருமை சேர்க்கும் கமல்



விஸ்வரூபம் போல், ஹொலிவூட் தரத்தில் படங்களை இயக்கி வளர்ந்து விட்டபோதும், தன்னை வளர்த்து விட்ட ஏணிகளை மறக்காதவர் கமல். தன் ஆரம்பகால வளர்ச்சிக்கு வேர்களாக இருந்தவர்களை, இப்போதும் நன்றியோடு எண்ணிப் பார்ப்பதோடு அவர்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளையும் செய்கிறார். உதாரணத்திற்கு தான் கதாநாயகனாக நடிக்கத் தொடங்கிய ஆரம்ப காலத்தில், தன்னை வைத்து, உணர்ச்சிகள், மனிதரில் இத்தனை நிறங்களா போன்ற படங்களை இயக்கிய ஆர்.சி.சக்தியுடன், இப்போது வரை பழைய நட்பை தொடர்ந்து வருகிறார் கமல்.

வன்முறைக்கு எதிரான கருத்தினை மையமாக வைத்து ரோஜாக்கள் ஐந்து என்றொரு குறும்படத்தை, தற்போது இயக்குகிறார் ஆர்.சி.சக்தி. இதில் அவரது ஐந்து பேரன்கள் நடிக்கின்றனர். இந்த படத்திற்கு கமலை ஒரு பாடல் பாடி தருமாறு கேட்டுக் கொண்டாராம். அதையடுத்து பாடலின் சூழலைக் கேட்ட கமல் அதற்கான பாடலையும் தானே எழுதி பின்னணியும் பாடிக் கொடுத்து, நட்புக்கு பெருமை சேர்த்துள்ளாராம்.

## 3 நாளில் 100 கோடி வசூலித்தது தூம் 3



இந்திய சினிமா இதுவரை காணாத அளவிற்கு அத்தனை சாதனைகளையும் அடித்து நொறுக்கி வருகிறது தூம் 3. சுமார் 250 கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்ட இந்தப் படம் கடந்த 20ஆம் திகதி வெளியானது. உலகம் முழுவதும் சுமார் 4 ஆயிரம் தியேட்டர்களில் ரிலீசானது. முதல் நாளான வெள்ளிக்கிழமை மட்டும் 36 கோடி வசூலித்தது. இந்தியாவில் மட்டும் 33.42 கோடி. இது இந்திய சினிமாவில் சாதனை கலெக்ஷனாகும். அடுத்த நாள் 38 கோடியும், அதற்கு அடுத்தநாள் 42 கோடியும் வசூலித்து மூன்று நாட்களிலேயே 100 கோடியை தாண்டியது. இது ஆங்கிலத்தில் உலகம் முழுவதும் வெளியாகும் ஹொலிவூட் படங்களுக்கு நிகரான வசூலாகும்.

4 ஆயிரம் தியேட்டர்களில் வெளியிடப்பட்டிருப்பதால் படம் மூன்று வாரங்கள் மட்டுமே அந்த தியேட்டர்களில் இருக்கும் அதன் பிறகு மூன்றில் ஒரு பகுதியாக குறைந்து விடும். அதற்குள் 300 கோடிக்குமேல் வசூலித்து விடும் என்கிறார்கள்.

## இத்தாலியில் புதுவருடம் கொண்டாடும் அமலாபால்



ரொம்பவே உற்சாகத்தில் இருக்கிறார், அமலா போல். மலையாளத்தில் இவர் நடித்த இந்தியன் பிரணயகதா தமிழில் நடித்த, நிமிர்ந்து நில் ஆகிய படங்கள் விரைவில் வெளியாகவுள்ளது தான், இதற்கு காரணம். இந்த இரண்டு படங்கள் வெளியானதும் என் மார்க்கெட் சூடு பிடித்து விடும். அப்புறம் என்னை மார்க்கெட் இல்லாத நடிகை என யாரும் கூற முடியாது என்கிறார். இந்த உற்சாகத்துடனேயே இத்தாலிக்கு கிளம்ப போகிறார்.

அமலா போலுக்கு இந்தாண்டு புத்தாண்டு கொண்டாட்டம் ரோமில் தானாம். அமலா மட்டுமல்லாமல், அவரின் குடும்பத்தினரும் உடன் செல்கின்றனர். புத்தாண்டு அன்று அங்கு நடக்கும் சிறப்பு பிரார்த்தனையிலும் பங்கு பெறப் போகிறாராம். இந்தாண்டில், நடிப்பு திறமையை வெளிப்படுத்தும் வகையிலான படங்கள் கிடைக்க வேண்டும் என, பிரார்த்திக்கப் போகிறாராம்.

## கொலைவெறியில் அன்டரியா




ஆயிரத்தில் ஒருவன், பச்சக்கிளி முத்துச்சரம் படங்களில் நடித்தபோது, கதாநாயகி வேடங்களை இலக்காக கொள்ளாமல் கிடைத்த வாய்ப்புகளை பயன்படுத்தி வந்த அன்ட்ரியாவுக்கு கமலின் விஸ்வருபம் படத்தில் நடித்த பின் நடிப்பின் மீதான மோகம் அதிகரித்து விட்டது.

அதனால் இந்த படத்தில் இரண்டு ஹீரோயின் என யாராவது கதை கூறினால் கொலை வெறியுடன், அவர்களை துரத்தி விடுகிறார்.

ஒரு ஹீரோயின் மட்டுமே உள்ள கதை என்றால் உடனடியாக, ஓ.கே., சொல்கிறார். ஆனால் மலையாளத்தில், அவர் நடித்துள்ள சில படங்களில், படு கவர்ச்சியாக நடித்துள்ளதாகவும் செய்தி பரவியுள்ளது.

இது குறித்து அன்ட்ரியாவைக் கேட்டால், தமிழைப் போல்தான் மலையாளத்திலும் அளவான கவர்ச்சியில் நடிக்கிறேன். சில காட்சிகளில் கொஞ்சம் தாராளம் காட்டியிருப்பது போல்தெரியும். ஆனால், அது மோசமாக இருக்காது என்கிறார்.

## மோகன்பாபுவின் பத்மஶ்ரீ விருதை திரும்ப பெற உத்தரவு



பிரபல தெலுங்கு நடிகர் மோகன்பாபு. திருப்பதியை சுற்றி நிறைய கல்வி நிறுவனங்களை நடத்தி வருகிறார். அவரது கல்வி சேவையை பாராட்டி மத்திய அரசு அவருக்கு கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு பத்மஶ்ரீ விருது வழங்கியது. மரியாதைக்குரிய இந்த விருதை தனது அரசியல் செல்வாக்கிற்கும், கல்வி நிறுவனங்களை வளர்ப்பதற்கும் மோகன்பாபு தவறாக பயன்படுத்துகிறார். எனவே அந்த விருதை அவரிடம் இருந்து திரும்ப பெற வேண்டும் என்று அதற்கான ஆதாரங்களுடன், இந்திரசேனா ரெட்டி என்பவர் ஐதராபாத் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிமன்றம். மோகன்பாவுக்கு வழங்கப்பட்ட பத்மஶ்ரீ விருதை திரும்ப பெறுமாறு மத்திய அரசுக்கு உத்தரவிட்டது. இந்த தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்ய மோகன்பாவு முடிவு செய்துள்ளார்.

## ஒரே படத்துக்கு 60 தயாரிப்பாளர்கள்



ஆபாவாணன், அரவிந்தராஜ் ஆகியோரிடம் உதவி இயக்குனராக பணியாற்றிய எஸ்.கமல் டைரக்டராக புரமோஷன் ஆகியிருக்கும் படம் மறுமுகம். இதனை தயாரிப்பவர்கள் அவரது 60 நண்பர்கள். குன்னூர் ஜெயிண்ட் ஜோசப் பள்ளியில் ஒன்றாக படித்த நண்பர்கள் 60 பேரை தயாரிப்பாளராக்கி இந்தப் படத்தை எடுத்து வருகிறார்.

டானியல் பாலாஜி, அனூப், ப்ரீத்தி தாஸ், பானுசந்தர் நடித்துள்ளனர். கன கராஜ் படப்பிடிப்பாளர்., அகஸ்தியா இசை. குற்றாலத்தை சுற்றி 35 நாளில் படத்தை எடுத்து முடித்து விட்டனர். எதுவுமே அளவுக்கு மீறினால் விஷம் ஆகும். அன்பும் அப்படித்தான். அதீத அன்பு, அதுவும் பெண் மீது ஆண்கொள்ளும் அன்பு எல்லை மீறினால் என்ன ஆகும் என்பதுதான் கதை. விரைவில் இத்திரைப்படம் வெளியாகும் என நம்பப்படுகிறது.

## சீரியலுக்கு வந்துவிட்டார் சங்கவி



அஜீத்துடன் அமராவதி படத்தில் அறிமுகமானவர் சங்கவி. அதன் பிறகு விஜய்யுடன் ரசிகன், விஷ்ணு, கோயம்புத்தூர் மாப்பிள்ளை படங்களில் நடித்தார். சுமார் 60 படங்கள் வரை நடித்த சங்கவி சினிமாவைவிட்டு விலகினார். சில வருடங்களுக்கு முன்பு சாவித்ரி என்ற சீரியல் மூலம் சின்னத்திரைக்கு வந்தார். அதன் பிறகு அவர் திருமணமாகி செட்டிலாகிவிட்டார் என்று செய்திகள் பரவியது. இப்போது மீண்டும் காலபைரவர் என்ற சீரியலில் நடிக்கத் தொடங்கி இருக்கிறாராம். இத்துடன் அவர் தனக்கு இன்னும் திருமணமே ஆகவில்லை என்றும் தெரிவித்துள்ளாராம்.

## தமன்னாவை மிரளவைக்கும் லட்சுமிமேனன்



முதல் ரவுண்டில் மொடர்ன் வேடங்களாக நடித்து வந்த தமன்னா, இரண்டாவது ரவுண்டில் கிராமத்து கதைகளில் நடிப்பதில் ஆர்வம் காட்டி வருகிறார். இதனால் முன்னணி ஹீரோக்கள் நடிக்கும் ிராமத்து படங்களின் வாய்ப்புகளை கைப்பற்ற, திட்டம் தீட்டினார். ஆனால் அப்படி அவர் எந்த கம்பெனி படத்துக்கு கல்லெறிந்தாலும் அங்கிருப்பவர்கள், ஏற்கனவே லட்சுமி மேனனை புக் செய்து விட்டோமே என்று, கீறல் விழுந்த ரெகோர்டு போல் ஒரே பதிலை அளிக்கின்றனராம்.


இது மட்டுமல்லாமல் லட்சுமிமேனன் நடித்த, படங்களெல்லாமே ஹிட் அவரது சம்பளமும் மிகக்குறைவு என்றும் அவருக்கு சாதகமாக பேசுகின்றனராம். இதனால் கோடிக்கணக்கில் சம்பளம் வாங்கும் தமன்னா தடுமாறிப்போய் நிற்கிறார்.

## சூப்பர்ஸ்டாருடன் மீனா




மலையாளத்தில் சூப்பர் ஸ்டார் ஜோடியாக மீனா நடித்த படம் தமிழில் ரீமேக் செய்யப்படுகிறது. மீனா திருமணத்துக்கு பிறகு மலையாளத்தில் மோகன்லால் ஜோடியாக டிரிஷ்யம் என்ற படத்தில் நடித்தார். இப்படம் சமீபத்தில் ரிலீசாகி வெற்றிகரமாக ஓடியது. இதை தமிழில் ரீமேக் செய்யும் உரிமையை பெற பலர் போட்டியிட்டனர்.

இறுதியில் நடிகை ஸ்ரீப்ரியா கணவர் ராஜ்குமார் கைக்கு கிடைத்துள்ளது. இவர் 22 பிமேல் கோட்டயம் என்ற மலையாள படத்தை மாலினி 22 பாளையங்கோட்டை என்ற பெயரில் தமிழில் ரீமேக் செய்து வருகிறார்.



# கவிதைப் பூங்கா



## வசந்தகால திறப்பு

இவன்
நம்பியிருந்தான்
வசந்த கால
திறப்பு
அது உன்னிடம் தானே
இருக்கிறது
என்று
நீயோ
அணைத்து விட்டாய்
என் வாழ்க்கை
கோவிலில்
எரிந்து
கொண்டிருந்த
வெளிச்சத்தை
கூட
நம்தேசம்
உலகத்தை நம்பி
ஏமாந்ததைப்
போல
இவனும்
ஏமாந்து போனான்
உன்னை
நம்பி
நான்
உன்னிடம்
கையேந்தி விட்டு
வெறும்
கையோடு
புறப்படுகிறேன்
நீ
எனக்காக
அழாமல் விட்டாலும்யாரோ
ஒருத்தி எனக்காக
அழக்கூடும்

உயிரோவியன்



மென்மையைத்
தொலைத்த
பெண்மையே
என் சரித்திரக்
கதவுகளை
உடைத்து
காயம் செய்ய
எங்கிருந்து
கற்று வந்தாயடி

மருதங்கேணியூர்
வே.வே அகிலேஸ்வரன்

## இயற்கை என்னும் இளையக்கன்னி

ஆண்டில் தையாக வந்தவள்
மனதில் விதையாக முளைவிட்டாள்
வெண்பனிக்குளிரில் மாசியாக மலர்ந்தவள்
பச்சை இலைகளாக துளிர்விட்டாள்
வசந்த காலத்தின் கதிரவன் வரவால்
பூக்களாக விரிந்தாள்
பங்குனியும் சித்திரையும் தாலாட்ட
தேனாக கவிகள் வடித்தாள்
வைகாசியும் ஆனியும் சேர்ந்து
அணைபோட்டிருக்கும் தேன் குளத்தில்
காதல் கப்பலை ஓட்டிவிளையாட
சம்மதம் கேட்டாள் இளவேனில் காதலி
இயற்கை என்னும் இளையக்கன்னி
ஆனி ஆவணி புரட்டாதியில்
நெஞ்சமென்னும் நீல வானத்தில்
தேய்ந்துபோன நிலவுக்கன்னியானாள்
காலமாற்றத்தில் கடும்மழை
ஐப்பசியிலும் கார்த்திகையிலும்
மனமென்னும் குளத்தில்
புதிய வெள்ளமாக நிரம்பினாள்
ஆண்டு முடியும் நிகழ்காலம் இது
காதல் குளத்தில் நீந்திய மார்கழிக்கு
காதல்வலை வீசினேன்
மௌனமாக பனிக்குளிரில் ஓடினாள்
புதிய ஆண்டைத் தந்துவிட்டு

வீ.அருள்ராஜா
வவுனிக்குளம்


## கலைந்த கனவுகள்

புதையுண்டு போன கனவுகளால்
விழிகள் அவளை வெறுக்கின்றது
ஏனெனில் எப்போதும் வழியும்
கண்ணீராய்!

கனவுகள் சிதறிப் போனதால் – அவள்
மனம் பிணமாகி நீண்ட நாள்...
இருந்தும் உடைந்து போன கனவுகளுடன்
உடைந்த கண்ணாடியாய் அவள்...!

வேல்மகள்
புளியம்பொக்கணை





## பெண்ணே

நாம் காதலித்தபோது உனக்கு
கண் தெரியவில்லை
நாம் பழகியபோது உனக்கு
வார்த்தைகள் வரவில்லை
நீ என்னைத்தேட வந்தபோது உனக்கு
உன் சொந்தங்கள் தெரியவில்லை
நாம் திருமணம் செய்தபோது உனக்கு
குடும்பப் பொறுப்பு தெரியவில்லை
குழந்தை பிறந்தபோது உனக்கு
பாசம் தெரியவில்லை
நான் உன்னில் அக்கறைகொண்டபோது உனக்கு
பாசத்துக்கும் சந்தேகத்துக்கும்
வித்தியாசம் தெரியவில்லை
ஆனால் இன்று உனக்கு
என்னையே யார் என்று தெரியவில்லை

சு.தேவகுமார்
செட்டிகுளம்



## வாழ்கிறாய்

என்
காதலின் சின்னமாய்
எண்ணங்கள் கலைந்திடா
வண்ணமாய்
என் நெஞ்சில் வாழும்
ஜீவிதமே
வானத்து நிலவின்
வண்ணமாய் வந்த ஓவியமே
காதல் மலரே
என் காதலுக்கு காவியமாய்
கவிகளுக்கு நயங்களாய்
பொருளாகி வந்தவளே
என் கண்மனியே
என் உள்ளத்தை கொள்ளைகொண்டு
இதயத்தில் உயிராகி
உதிரத்தில் உணர்வாகி
வாழ்பவளே
என் காதலியே
காலங்கள் மறைந்தாலும்
மறையாது உன் நினைவுகள்

சாருலதா


## தாய் மகன்

நரைத்த குழந்தை
நானாகிப் போனாலும்
நீ –
உரைத்த அத்தனையும்
நிரையாக நின்றென்னை
கரைசேர்க்க
காத்திருக்கும்...
கணங்கள் ஒவ்வொன்றும்
திரைமூடிப் போகாமல்
கண்களில் உன் நினைவு
பூத்திருக்கும்...
கருத்தாயே!
உருவம் பெரிதாகிப்
போனாலும்
உன் எண்ணத்தில்
எப்போதும்
குழந்தை நான்
கர்வம் இல்லாததால்
தர்மம் செய்கின்ற
தமிழ் மகனாய்
இருப்பேனம்மா...!

கவிஞர்.பருத்திதாசன்




# புனைகதைப் புயல்



# முள்ளிடை முகிழ்த்த மலர்

அன்னக்கிளி

தொடர் - 37



எல்லோரும் உறங்கி நீண்ட நேரமாகியும் வதனாவுக்கு நித்திரை வரவில்லை. மனம் சஞ்சலப்பட்டது. மங்கிய ஒளியில் பிள்ளையின் முகத்தைப் பார்த்தாள். அசதியுடன் தூங்கிக்கொண்டிருந்தாள். வழமையைவிட முகம் பொலிவாயிருந்தது. மகிழ்வு நித்திரையிலும் தொடர்ந்து ஜொலித்துக்கொண்டிருந்தது.

நன்மை, தீமை அறியாத கள்ளம்கபடமில்லாத முகத்தில் இந்த மகிழ்வு தொடருமா என நினைத்தபோது அவளது தலையே வெடித்து விடும் போல இருந்தது. தகப்பன் இல்லாத பிள்ளையை எத்தனைகாலம் மற்றவர்கள் பார்ப்பார்கள். இப்போ 'ராம்' பார்த்தாலும் எதுவரை பார்க்க முடியும். அவனுக்கு ஒருவாழ்க்கை அமைந்த பின்னர் எப்படி சாத்தியமாகும். அதற்கிடையில் 'ரவி'யின் நிலை எப்படி இருக்கிறதோ என்ற பயமும் எழுந்தது. இவ்வளவு காலமும் குடும்பத்துடன் தொடர்பை ஏற்படுத்தாத படியால் கடுங்காயங்களுடன் இருப்பாரோ என்ற அச்சமும் அவளிடம் இருந்தது.

"சிலவேளை 'சர்மி' போல ஏதாவது ..... கடவுளே அப்படி இருக்கக்கூடாது. அப்படியிருந்தால்.... சிலவேளை குடும்பத்தை தேடுவது கஸ்ரமாகியிருக்கும். அப்ப அவர் வீட்டுக்கு வரும்போது..."

அவளது கற்பனை வார்த்தைகளாகவே வெளிவந்தன. அழுதாள். விம்மினாள். நீண்டநேரத்தின் பின் உறங்கிப்போனாள்.

காலையில் எல்லோரும் எழுந்து இடங்களை துப்பரவு செய்து கொண்டிருந்தனர். 'தமிழ்' எழும்பிய போதும் அலுப்புத்தீராததால் வெளியில் வராமல் தாயையும் எழும்பவிடாமல் அடம்பிடித்துக்கொண்டிருந்தாள். நீண்ட நேரத்தின் பின் தாயும் மகளும் வெளியே வந்தனர். தாயின் முகம் அழுதழுது வீங்கியிருந்தது. கண்ணும் கடுமையாக சிவந்திருந்தது. பார்த்தவுடனேயே அவனுக்கு விடயம் விளங்கிவிட்டது. ஆயி னும் அதுபற்றி எவரும் அவளை எதுவுமே கேட்கவில்லை. ஏனெனில் சிரித்தபடி பிறந்தநாளை எல்லோரும் கொண்டாடியபோதும், 'ரவி' இல்லையே என்ற பெரும் துயரம் எல்லோர் மனதையும் அழுத்திக் கொண்டிருந்ததால் அவர்களும் அழுதிருந்தார்கள்.

நாட்கள் நகர்ந்தன. கடையோடு அவள் பொழுது போய்க்கொண்டிருந்தது. கடையும் பெருத்து வியாபாரமும் அதிகரித்திருந்தது. 'கட்டடப்பொருட்கள்' நல்ல கேள்விக்குரியதாக இருந்ததால் அவன் அதில் அதிக கவனமெடுத்து வேலை செய்தான். ஓடித்திரிந்து முகவர்களைப் பிடித்து கொள்வனவுகளை செய்வான். அதனால் கடையில் நிற்பதே குறைவு. பொருட்களை எடுத்துக்குடுக்க, இறக்கிவைக்க அவளுக்கு உதவியாக அப்பாவே கடையில் நிற்பார். விலைகள் மட்டும் அவனிடம் கேட்டு அதன்படி விற்பாள். மற்றும்படி எல்லாவற்றையும் அவளே கவனித்துக் கொண்டாள். யாராவது கடன் என்று வந்தாலும் நம்பிக்கையை பொறுத்து தானே கொடுத்து பெற்றுக்கொள்வாள். ஆயினும் அவன் கடையில் நிற்கும்போது கணக்குகளை கூறிக்கொள்வாள்.

"ஆ..பிரச்சினையில்லை நான் மறந்திடுவன் நீங்களே பாத்து வாங்குங்கோ."

என்பான். மீள்யேற்றம் நடந்து நாட்கள் நகர்ந்தன. மெல்லமெல்ல ஊர்கள் நகரமயமாகிக்கொண்டிருந்தன.

வீதிப்போக்குவரத்துக்கள் ஓரளவு சீரடைந்தன. வீடுகளும் கட்டப்பட்டு குடிமனைகளும் பொலிவு பெற்றன. 'ராம்' முதலில் பாவித்த கைபேசி இப்போது அவளிடம் தான் இருந்தது. கடைக்கான தொடர்புகளுக்கு பயன்படுத்துவதால் அதனைக் கடையிலேயே வைத்திருந்தான். அதனைவிட இப்போது தனக்கு ஒன்று அப்பாவிற்கொன்று என வீட்டில் பல தொலைபேசிகளை வாங்கிக் கொடுத்திருந்தான். ஒரு நாள் கடையில் மும்முரமாக வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தாள். அந்த தொலைபேசி ஒலித்தது. ராம் இல்லாத நேரங்களில் அவள் பதிலளிப்பாள். இப்போது அவன் நிற்பதால் அவனிடமே கொடுத்தாள்.

"ஆரு...."

"யாரெண்டு தெரியேல்ல.... லான்ட் போன்.... பதினொண்டில தொடங்குது."

"நீங்க கதையுங்க...."

"வழமையான நம்பரில்ல... கதையுங்க கடைய நான் பாக்கிறன்."
"ஆ.... தாங்கோ..."

போனை வாங்கியவன் கடையின் வெளியே போய் 'பச்சை' பொத்தானை அழுத்தி காதில்வைத்தான்..

"ஹலோ..."

என்றான். மறு முனையில் ஒரு பெண்குரல்.

"வணக்கம் நீங்க கணபதிப்பிள்ளை ரவிக்குமாரின் உறவினரா?"
என்று வினாவியதுடன் தம்மை அறிமுகம் செய்து காணமல் போனவரின் நெருங்கிய உறவுகளுடன் கதைக்க வேண்டும் என கேட்டார்கள்.

"வைவ்' இருக்கிறா கதையுங்க..."

போனை கொண்டு கடைக்குள்போய்

"வதனா உங்களோட கதைக்கவாம் காணாமல் போனாக்கள பதிஞ்சினம் அவையள் தான் உங்களோட தான் கதைக்கவாம்."

"என்ன கதைக்கிறது. ..." போனை வாங்கியவள் கடைக்கு வெளியே போனாள்.

"ஹலோ.... வணக்கம் சொல்லுங்க..."
"வணக்கம் நீங்க...."

"கணபதிப்பிள்ளை ரவிக்குமாரின் மனைவி."

"ஓகே...நாங்க வாற சனிக்கிழமை ஒரு கவனயீர்ப்பு போராட்டம் ஒண்டு ஒழுங்கு செய்திருக்கிறம்."
"எங்க..."

ஆர்வமுடன் கேட்டாள்.

"வவுனியா பஸ் நிலையத்தடியில... அதுக்கு உங்கட பங்களிப்பும் வேணும்."

"நாங்க என்ன செய்ய வேணும்."
"உங்கட காணாமல் போனவற்றை படம் ஒண்டுதேவை...."

"கொண்டு வந்து எப்ப தரவேணும்."
"நீங்கள் வரும்போது கொண்டு வரலாம். கொஞ்சம் பெரிசாய் இருந்தால் நல்லம்."

"சின்னதா இருக்கு பெரிசாக்கி கொண்டு வாறம்."

"ஓகே நீங்க குடும்பமாய் வந்து கலந்து கொண்டா... நல்லது."

"வாறம் எத்தின மணிக்கு வரவேணும்."

"காலையிலயிருந்து மாலை வரையும் இருக்கு. நீங்க வரக்கூடிய மாதிரி முயற்சி செய்து வாங்கோ."

"சரி..வேற..."
"ஓகே.... மறக்காம வந்திடுங்க,"
"ஓமோம்."

'லைனை'க் கட்செய்தாள். மனதில் பதட்டமாயிருந்தது. ஏதோ ஒரு விதஉணர்வு அவளைஉந்தித்தள்ளியது. உள்ளே வந்தவள் போனை வைத்து விட்டு அமைதியாக நின்றாள்.

கடையில் ஒருவரும் இருக்கவில்லை அவன் பொருட்களை எடுத்து அடுக்கி வைத்துக்கொண்டிருந்தான்.

"என்னவாம்?"

அவனே கேட்டான்
"வாற சனிக்கிழைமை வவுனியாவில

ஏதோ கவனயீர்ப்பு போராட்டமாம்..."

இழுத்தாள்.
"எவடத்த..."
"வவுனியா ரவுனுக்குள்ள பஸ்ரான்டிலையாம்."

"அரசியல் கட்சிக்காரர் சேந்து செய்யிறாங்கள்போல.... வரட்டாமே..."

"ஓ.... வரேக்க படம் கொண்டுவரட்டாம்."

"அண்ணான்ர படமா?...."
"ஓ... கொஞ்சம் பெரிய படம் வேணுமாம்."

"ஆ...பாப்பம்.. அண்ணான்ர அரைப்போட்டோ கிடக்கெல்லே... அதை குடுத்து விட்டா கழுவி எடுக்கலாம்."

"ஓ.. வரேக்க கொண்டுவரச் சொன்னவை..."

"ஆ....சரி."
"என்னண்டு போறது. காலமையிலேருந்து பின்நேரம் வரையும் இருக்கு"

"அம்மாவ கூட்டிக்கொண்டு போட்டு வாங்கோவன்."
"இம்..."

ஜீவனில்லாமல் வந்த அவளது வார்த்தையை கேட்டு சட்டென திரும்பிப்பார்த்தான்.

"அவளது முகம் இறுகிப்போயிருந்தது."

**அவள் வருவாள்...**



# ஆன்மீக உலகம்



## கிறிஸ்மஸ் பற்றிய தகவல்கள்



* கதவைத் திறந்து கிறிஸ்மஸ் வாழ்த்து: பெர்லின் நாடு இரண்டாகப் பிரிந்திருந்த காலத்தில் இரண்டு நாடுகளுக்கும் நடுவே ஒரு சுவர் அமைக்கப்பட்டிருந்தது. சுவரின் நடுவே ஒரு கதவு அமைக்கப்பட்டது. கிறிஸ்மஸ் அன்று மட்டுமே, இந்தக் கதவு திறக்கப்பட்டு இருநாட்டு மக்களும் வாழ்த்துக்களை பரிமாறிக் கொள்வர். மற்ற நாட்களில் இந்தக் கதவு மூடப்பட்டிருக்கும்.

* மலர் அலங்காரம்: இங்கிலாந்தில் கிறிஸ்மஸ் மரம் அறிமுகப்படுத்துவதற்கு முன்னதாகவே ஜேர்மனி, ஆஸ்திரியா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் பிர் என்ற மரத்தை அலங்கரிக்கும் வழக்கம் இருந்தது. இருப்பினும், மரங்களில் இலைகள் மற்றும் மலர்களைக் கட்டி அலங்கரிக்கும் வழக்கம் இங்கிலாந்தில் தான் 1841ஆம் ஆண்டில் ஆரம்பித்தது. அல்பெர்டினால் என்ற அரசன் முதன்முதலாக கிறிஸ்மஸ் மரத்தை நட்டார்.

* 20நாள் கொண்டாட்டம்: ஸ்கொட்லாந்து நாட்டில் 20 நாட்கள் கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்படும். யூல் எனப்படும் டிசம்பர் 18ஆம் திகதியே கிறிஸ்மஸ் கொண்டாட்டம் தொடங்கி ஜனவரி 6ஆம் திகதி வரை நடக்கும். கடைசிநாள் விழாவை எபிபனி என்கிறார்கள்.

* போக்குவரத்து நிறுத்தம்: பின்லாந்து நாட்டில் கிறிஸ்மஸ் அன்று போக்குவரத்து நிறுத்தப்பட்டு விடும். அந்நாட்டு மக்கள் தேவாலயங்களுக்குச் செல்ல சறுக்கு வண்டியைப் பயன்படுத்துகிறார்கள். அமெரிக்காவில்கிறிஸ்மஸ்பண்டிகையன்று மக்கள் மின்னல் வேகத்தில் தங்கள் வாகனங்களை செலுத்துவது வழக்கம். அவ்வாறு விதிகளை மீறும் வாகனங்களின் மீது பொலீசார் கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டைகளை ஒட்டி அனுப்புகிறார்கள்.

* இலை இல்லாத மரம்: ஸ்வீடன் நாட்டில் மக்கள் கிறிஸ்மஸ் மரங்களை நடும்போது பச்சை இலைகளைப் பயன்படுத்துவதில்லை. ஏனெனில், அந்நாட்டில் யாராவது இறந்து போனால் பச்சை மரங்களை சமாதி அருகில் நடுவது உண்டு. இறப்பின் சின்னமாக பச்சை மரம் இருப்பதால் கிறிஸ்மஸ் மரங்களுக்கு முழுக்க முழுக்க பூக்களையே பயன்படுத்தி அலங்கரிக்கிறார்கள்.

* கிறிஸ்மஸ்குடில்: இயேசுநாதர்பிறந்ததைப் போல சித்தரிக்கும் கிறிஸ்மஸ் குடில்கள் விதவிதமான அலங்காரங்களுடன் உலகெங்கும் அமைக்கப்படுகின்றன. இதை முதன்முதலாக புனித பிரான்சிஸ் என்பவர் 1722ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தினார்.

## உண்மையான ஆன்மீக வாழ்க்கை



ஆன்மீகம் என்பது நெற்றியில் விபூதி அணிந்து கொண்டு எந்நேரமும் இறைவனின் நாமத்தை உச்சரித்துக் கொண்டும் பலர் பார்க்கும்படி கோயிலுக்கு நன்கொடை செய்வதும், அடுத்தவருக்கு பலர் முன்னிலையில் உதவி செய்வதும் மட்டுமல்ல. மனதில் தீய எண்ணங்கள் இல்லாமல், அடுத்தவருக்கு நல்லது செய்யாவிட்டாலும், கெடுதல் செய்யாமல் மனசாட்சிக்கு பயந்து வாழ்வது ஒருவகை ஆன்மீகம்.


அடுத்ததாக பல மணி நேரம் வேறு பல சிந்தனையுடன் பூஜை செய்யாமல் இறைவனை ஒரு நிமிடம் வணங்கினாலும் எந்தவித சிந்தனையுமின்றி ஆத்மார்த்தமாக வணங்கி எனக்கு உன்னை தவிர வேறு யாரும் தெரியாது உன்னை தவிர வேறு யாரும் கிடையாது அனைத்தும் நீயாக இருக்கிறாய். இந்த உடலை நீயே வழிநடத்தி செல். என இறைவனிடம் சரணடைந்து விட்டு நமது கடமைகளை மிகச்சரியானதாக செய்வது ஒரு வகை ஆன்மீக வாழ்க்கை.

நான் தினமும் நான்கு முறை குளிக்கிறேன். ஆறு முறை சுவாமி கும்பிடுகிறேன். ஆனால் இறைவன் என்னை கண்திறந்து பார்க்க மாட்டேன் என்கிறார் என்றெல்லாம் நிறைய பேர் குறைபட்டுக்கொள்கின்றனர். ஆனால் நமக்கு ஏற்படும் நன்மைகளுக்கும், தீமைகளுக்கும் நாமே பொறுப்பு. அனைவரிடமும் அன்பாக பேசுதல், நன்மை செய்தல், மரியாதையுடன் நடத்துதல், எதற்குமே ஆசைப்படாமல் இருத்தல், நமது வலது கையில் செயல் திறமை உள்ளது, அதை மிகச் சரியாக செய்து உண்மையாக வாழ்ந்தால், இடது கையில் வெற்றி தானாகவே வந்து சேரும். இது ஒரு வகை ஆன்மீக வாழ்க்கை.

இறைவனுக்கு நீங்கள் பிரசாதம் செய்து, படையலிட்டு, மிகப்பிரமாண்டமான பூஜை செய்ய வேண்டும் என்பதெல்லாம் இல்லை. அதை அவன் விரும்புவதும் இல்லை. அவன் விரும்புவதெல்லாம் ஒன்றே ஒன்று தான். அது தான் உண்மையான பக்தி. இறைவனுக்கு நம் உள்ளத்தின் ஒரு சிறு ஓரத்தில் உண்மையான பக்தியை வைத்து சதா சர்வ காலமும் அவனை நினைத்து எந்த செயல் செய்தாலும் அது அவனால் தான் செய்யப்படுகிறது என்ற நினைப்புடன் செய்து அந்த செயலின் பலனை அவனுக்கு சமர்ப்பணம் செய்து வாழ்ந்து வந்தால் அதுவே உச்சகட்ட ஆன்மீகம்.

ALL IS NOT GOD, BUT GOD IS ALL கடவுள் அனைத்திலும் இல்லை ஆனால் அனைத்துமே கடவுளாக இருக்கிறார் என்ற பழமொழி ஒன்று உண்டு. இதன் அடிப்படையில் இந்த உலக உயிர்களுக்கு உங்களால் இயன்ற உதவி செய்து அதற்கான பலனை எதிர்பார்க்காமல் வாழ்ந்து வந்தால, மிகச்சரியான பாதையில் இறைவனை நீங்கள் நெருங்கி கொண்டிருக்கிறீர்கள் என்று அர்த்தம்.

## பெற்றோரைப் பேணுதல் பற்றி இஸ்லாம்



நபி (ஸல்) அவர்கள் மூக்கு மண்ணைக் கவ்வட்டும் பிறகும் மூக்கு மண்ணைக் கவ்வட்டும் பிறகும் மூக்கு மண்ணைக் கவ்வட்டும் என்று கூறினார்கள் யார்? அல்லாஹ்வின் தூதரே! என்று கேட்கப்பட்டது. அதற்கு நபி (ஸல்) அவர்கள், தம் பெற்றோரில் ஒருவரையோ அல்லது அவர்கள் இருவரையுமோ முதுமைப் பருவத்தில் அடைந்தும் (அவர்களுக்கு உடலாலும் பொருளாலும் ஊழியம் செய்து, அதன் மூலம்) சொர்க்கம் செல்லத் தவறியவர் என்று பதிலளித்தார்கள். (அபூஹுரைரா (ரலி) முஸ்லிம் 4987, அஹ்மத் 8201)

இவ்வுலகில் இறைவனுக்கு அடுத்தபடியாக அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டியவர்களில் முதலிடம் பெற்றவர்கள் பெற்றோர்கள் தாம். இவர்களுக்கு நல்ல முறையில் பணிவிடை செய்வது பிள்ளைகளின் கடமையாகும். என்னைத் தவிர வேறு யாரையும் வணங்காதீர்கள்! பெற்றோருக்கு உபகாரம் செய்யுங்கள்! என்று உமது இறைவன் கட்டளையிட்டுள்ளான். (அல்குர்ஆன் 17:23)


படைத்தவனுக்குச் செய்யும் கடமைக்குப் பிறகு அடுத்த கடமையாக பெற்றோருக்கு உபகாரம் செய்வதையே இவ்வசனத்தில் அல்லாஹ் குறிப்பிடுகின்றான். நான் நபி (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்விற்கு மிகவும் விருப்பமான செயல் (அமல்) எது? என்று கேட்டேன். அவர்கள், உரிய நேரத்தில் தொழுகையை நிறைவேற்றுவது என்றார்கள். பிறகு எது? என்று கேட்டேன். தாய் தந்தையருக்கு நன்மை புரிவது என்றார்கள். பிறகு எது? என்றேன். அவர்கள், அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரிவது என்று பதிலளித்தார்கள். இவற்றை மட்டுமே என்னிடம் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தெரிவித்தார்கள். இன்னும் அதிகமாக நான் கேட்டிருந்தால் எனக்கு இன்னும் அதிகமாகப் பதிலளித்திருப்பார்கள். (இப்னு மஸ்வூத் (ரலி) புஹாரி 527, முஸ்லிம் 137)

இறைவனுக்குச் செய்ய வேண்டிய கடமையான தொழுகைக்குப் பிறகு இறைவனுக்கு மிகவும் பிடித்தமான அமல், பெற்றோர்களுக்குப் பணிவிடை செய்வது தான் என்பதை நபிமொழியும் நமக்குத் தெளிவாக எடுத்துரைக்கிறது. ஆனால் தன்னைப் பெற்றெடுத்து, நல்நிலைக்கு ஆளாக்கிய பெற்றோர்களை பெரும்பாலோர் சரிவர கவனிப்பதில்லை. அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதும் இல்லை. மேலும் திருமணம் முடித்து விட்டால் மனைவியின் பேச்சைக் கேட்டு, பெற்றோர்களை அலட்சியப்படுத்தி விடுகின்றனர். இவ்வாறு செய்வது மிகப் பெரிய குற்றமாகும்.

நபி (ஸல்) அவர்களிடம் பெரும் பாவங்கள் பற்றிக் கேட்கப்பட்டது. நபி (ஸல்) அவர்கள், அல்லாஹ்வுக்கு இணை வைப்பது, பெற்றோருக்குத் துன்பம் கொடுப்பது, கொலை செய்வது, பொய் சாட்சி சொல்வது ஆகியன (பெரும் பாவங்களாகும்) என்று கூறினார்கள். (அனஸ் (ரலி) புஹாரி 2653, முஸ்லிம் 144) பெற்றோர்கள் வயோதிகத்தை அடைந்து விட்டால் அவர்களின் நிலையும் இன்னும் மோசமாகி விடுகிறது. வயதாகியதால் ஏற்படும் கோளாறுகள், உடல்நிலை மோசம் என்று பல இன்னல்களுக்கு ஆளாகும் பெற்றோர்களை கவனிக்காமலும் பராமரிக்காமலும் அவர்களுக்கு ஆதரவாக இருக்காமலும் கவனிப்பற்று விடப்படுபவர்கள் அதிகம். மேலும் அவர்களின் தொல்லைகள் தாங்க முடியவில்லை என்று முதியோர் காப்பகங்களில் விடப்பட்ட பெற்றோர்களும் அதிகம்.

வயது கூடும் போது பேச்சில் மாற்றங்கள் ஏற்படும் கோபம் ஏற்படும். அவர்கள் கோபமாகப் பேசும் போது, தொல்லைகள் தரும் போது பிள்ளைகள் அவற்றைப் பொறுத்துக் கொள்ள வேண்டுமே தவிர இதை ஒரு துன்பமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அவர்களை ஏசவோ, வெறுக்கவோ கூடாது. உம்முடன் இருக்கும் அவ்விருவருமோ, இருவரில் ஒருவரோ முதுமையை அடைந்து விட்டால் அவ்விருவரை நோக்கி சீ எனக் கூறாதே! அவ்விருவரையும் விரட்டாதே! மரியாதையான சொல்லையே அவ்விருவரிடமும் கூறு! அன்புடன் பணிவு எனும் சிறகை அவ்விருவருக்காகவும் தாழ்த்துவீராக! சிறுவனாக இருக்கும் போது என்னை இருவரும் பராமரித்தது போல் இறைவா! இவ்விருவருக்கும் அருள்புரிவாயாக! என்று கேட்பீராக! (அல்குர்ஆன் 17:23-24)

வயது முதிர்ந்த பெற்றோரைக் கொண்டவர்கள் அவர்களை ஒரு சுமையாகக் கருதாமல் அவர்களுக்குப் பணிவிடை செய்தால் நிச்சயம் சொர்க்கம் செல்ல முடியும். இந்த வாய்ப்பை ஒரு நல்வாய்ப்பாக எடுத்துக் கொள்ள வேண்டும். இதைத் தவற விட்டவன் சொர்க்கம் செல்வதற்குக் கிடைத்த மிகப் பெரிய அரிய வாய்ப்பை தவற விட்டவனாகவே கருதப்படுவான்.



# அறிவியல் உலகம்

## HTC-d புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசி



Desire 400 எனும் இரட்டை சிம் வசதி கொண்ட புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசி ஒன்றினை HTC அறிமுகம் செய்துள்ளது. 4.3 அங்குல அளவு மற்றும் 800 x 480 Pixel Resolution உடைய WVGA தொடுதிரையினைக் கொண்ட இக்கைப்பேசியானது 1.2 GHz வேகத்தில் செயற்படக்கூடிய Processor பிரதான நினைவகமாக 1 GB RAM ஆகியவற்றினையும் கொண்டுள்ளது.

இவை தவிர 8 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 1.6 மெகாபிக்சல்களை உடைய துணையான கமெரா என்பவற்றினையும் உள்ளடக்கியுள்ளது. Android Jelly Bean இயங்குதளத்தினைக் கொண்ட இக்கைப்பேசியில் 4GB சேமிப்பு நினைவகம் தரப்பட்டுள்ளது.

## மைக்ரோசொப்ட்டின் புதிய தகவல் அதிகாரியாக Jim DuBois நியமனம்




மைக்ரோசொப்ட் நிறுவனத்தில் கடந்த 6 மாதங்களாக தற்காலிக தலைமை தகவல் அதிகாரியாக(CIO) இருந்த Jim DuBois தற்போது நிரந்தரமாக அப்பதவியில் அமர்த்தப்பட்டுள்ளார்.

இந்த தகவலை மைக்ரோசொப்ட் நிறுவனம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இவர் கடந்த 20 வருடங்களாக மைக்ரோசொப்ட் நிறுவனத்தில் பணியாற்றி வருகின்றார். இக்காலகட்டத்தில் பல்வேறு முக்கிய பதவிகளை வகித்த அவர் தற்போது உலகளாவிய ரீதியில் 190 நாடுகளில் பணிபுரியும் 90,000 மைக்ரோசொப்ட் பணியாளர்களுக்கு தலைமை தாங்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பெரிய தொடுதிரை கொண்ட சாதனங்கள் அறிமுகம்



கைபேசி மற்றும் கணனிச் சாதன உற்பத்தியில் மக்கள் மத்தியில் நீங்கா அப்பிள் நிறுவனமானது தற்போது பெரிய தொடுதிரைகளைக் கொண்ட சாதனங்களை அறிமுகப்படுத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

இதன்படி 12 அங்குல தொடுதிரை கொண்ட iPad இனை 2014ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திலும், பெரிய தொடுதிரை கொண்ட iPhone இனை மே மாதத்திலும் அறிமுகம் செய்யவுள்ளது. இந்த அறிமுகங்களைத் தொடர்ந்து 11.1 அங்குல அளவுடைய Macbook Air சாதன உற்பத்தியை நிறுத்தி அதற்கு பதிலாக iPad சாதனத்தை பயன்படுத்த பயனர்களுக்கு அறிவுறுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வரவு செலவுகளை திட்டமிட உதவும் மென்பொருள்



கணனியின் வருகையால் அனைத்து துறைகளும் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளதுடன், அத்துறைகள் இலகுபடுத்தப்பட்டும் உள்ளது. இதே போலவே தனிப்பட்ட வரவு செலவுகளை திட்டமிடலிலும் கணனிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இதற்கென YourMoneyGuard எனும் மென்பொருள் பெரிதும் உதவியாகக் காணப்படுகின்றது. கலண்டர் அடிப்படையில் காணப்படும் இம்மென்பொருளின் உதவியுடன் ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களை மிகவும் இலகுவாக திட்டமிட்டு ஒழுங்குபடுத்தக்கூடிவாறு இருக்கின்றது.

## அமேசான் வழங்கும் அதிரடிச் சலுகை





ஒன்லைன் வியாபார நிறுவனமான அமேசான் தனது வாடிக்கையாளர்களுக்கு அதிரடிச் சலுகை ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி இந்த விடுமுறைகாலத்தில் அமேசானின் அப்பிளிக்கேஷன் ஸ்டோரிலிருந்து அப்பிளிக்கேஷன்களை தரவிறக்கம் செய்யும் அன்ரோயிட் வாடிக்கையாளர்களுக்கு 5 டொலர்கள் பெறுமதியான அப்பிளிக்கேஷன்களை இலவசமாக வழங்குகின்றது.

கடந்த 23ஆம் திகதி வழங்கப்பட்ட இச்சலுகையானது எதிர்வரும் 28ஆம் திகதி வரை இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பல மொபைல்களை ஒரே நேரத்தில் சார்ஜ் செய்யும் சாதனம்



டேப்லட், ஸ்மார்ட் கைப்பேசிகள் போன்ற ஒன்றிற்கு மேற்பட்ட சாதனங்களை ஒரே நேரத்தில் சார்ஜ் செய்யக்கூடிய சாதனம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

Octafire எனப்படும் இச்சாதனம் 100-240V, 47-63Hz மின்சாரத்தில் செயற்படக்கூடியதாகவும், 2.1A / 5V வெளியிடக்கூடியதாகவும் காணப்படுகின்றது. இதன் மூலம் அதிகபட்சமாக 8 வெவ்வேறு வகையான மொபைல்களை சார்ஜ் செய்ய முடியும்.

## ஆனந்தசங்கரி, ஆனந்தன் விவகாரம் சாதாரணமானது

தமிழர்விடுதலைக்கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி 23.12.2013அன்று காலை 9.50மணியளவில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அவர்களின் இல்லத்துக்கு சென்று அங்கு கட்சி தொடர்பாகவும் அதன் குறை நிறைகள் தொடர்பாகவும் சிநேகபூர்வமாகப் பேசிக்கொண்டிருந்த வேளையில் இருவருக்குமிடையில் திடீரென முறுகல்நிலை தோன்றிது என்றும் இதனால் இருவரும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர் என்றும் அண்மையில் செய்தியொன்று வெளியிடப்பட்டிருந்தது.

இதுதொடப்பில் த.வி.கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரியிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்டபோது நடைபெற்ற கட்சிமாநாடு தொடர்பில் ஏன் எனக்கு அறியத்தரவில்லை என்றும் அது சம்மந்தப்பட்ட ஏனைய விடயங்களை அவருடன் கதைத்தபோது சிவசக்திஆனந்தன் என்மீது கோபப்பட்டு தகாதவார்த்தைகளால் தரக்குறைவாக என்னைத் திட்டினார். ஆனால் தூஷணம் பேசவில்லை. என்னுடைய அரசியல் வாழ்க்கையில் இவ்வாறு என்னை தரக்குறைவாகப் பேசியது எனக்கு கவலையளிக்கிறது. ஆனால் அரசியலில் இவை சாதரணமானவைதான் என்றார். இதுதொடர்பில் நீங்கள் கண்டன அறிக்கை எதையும் வெளியிட்டீர்களா என்று கேட்டபோது இல்லை. ஆனால் வவுனியா மாவட்ட எமது கட்சி தலைவர் இராஜகுகனேஸ்வரன் கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டதாக நான் கேள்விப்பட்டேன். அவ்வாறு கட்சி அமைப்பாளர்கள், தொண்டர்கள் கண்டனங்களை வெளியிடுவது சாதாரணமே என்று கூறினார்.

இதேவேளை வவுனியா மாவட்ட தமிழர்விடுதலைக் கூட்டணியின் தலைவர் இரா.குகனேஸ்வரனின் கண்டன அறிக்கையில் சிவசக்தி ஆனந்தன் அண்மைக்காலமாக த.தே.கூட்டமைபை சிதைப்பதில் உன்னிப்பாக செயற்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. மாகாணசபை உறுப்பினர்களின் சத்தியப் பிரமாணத்தைக் குழப்பியதாக இருக்கட்டும், மாகாணசபைத் தேர்தலுக்குமுன் கூட்டமைப்பை உடைக்க முற்பட்டதாக இருக்கட்டும் இவற்றுக்கெல்லாம் இவரே சூத்திரதாரி. விக்கிரமாதித்தன் மாதிரி கூட்டமைப்பை உடைத்து தமிழர் ஒற்றுமைய்யை சீர்குலைப்பதன் அடுத்த முயற்சியே தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர் மீதான தாக்குதல் இந்தத் முயற்சியாகும். தமிழர் விடுதலைக் கூட்டணியினால் ஒற்றுமையை வலியுறுத்தி அண்மையில் ''ஒற்றுமையே பலம்'' என்று வெளியிட்ட சுவரொட்டிக்கு கடுமையான கண்டனத்தை வெளியிட்டதுடன் த.தே கூட்டமைப்பின் ஒற்றுமையையும் கேள்விக்குட்படுத்தியிருந்தார். தொடர்ந்தும் சிவசக்தி ஆனந்தனின் ஒற்றுமையைக் குலைப்பதற்கான முயற்சியைத் தொடரவிடமாட்டோம் என்பதைத் தெரிவிக்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இதுதொடர்பில் சிவசக்தி ஆனந்தனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, தமிழர் விடுதலைக் கூட்டணியின் வன்னித்தொகுதிக்கான தலைவர் ராஜகுகனேஸ்வரன் ஒற்றுமையைப் பற்றிப் பேசுவதற்கும் என்னைச் சீர்குலைப்பவர் என்று சொல்வதற்கும் தகுதியற்றவர். இவ்வாறான ஒரு சம்பவமே நடைபெறாத நிலையில் இப்படி கூறுவதால் தனது அரசியல் முகவரியை பதிவுசெய்து கொள்ள முயற்சிக்கின்றார். இவர் இதுவரையிலும் ஐந்து கட்சிகளில் செயற்பட்டுள்ளார். (ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, ஸ்ரீரெலோ, தமிழ்தேசிய முன்னணி தற்போது தமிழர் விடுதலைக் கூட்டணி)

உண்மையில் நானும் சங்கரியும் பேசிக்கொண்டிருந்தபோது எமக்கு அருகில் யாருமே நிற்கவில்லை. எனது வீட்டுநாய்தான் அருகில் நின்றுகொண்டிருந்தது. வடமாகாணசபைத் தேர்தலில் கூட ஆனந்தசங்கரியை முதன்மைப்படுத்தி நான்தான் பல கூட்டங்களுக்கு அவரை அழைத்திருந்தேன். அவருக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் முன்னுரிமை அளிக்கவேண்டும் என்று பேசியதும் நானும், என்னைச் சார்ந்தவர்களும்தான. இப்பிரச்சினை தொடர்பில் ஆனந்தசங்கரி அவர்கள் எக்கருத்துக்களையும், கண்டனங்களையும் வெளியிடவில்லை. அவருடைய கட்சி அமைப்பாளர்கள் தான் வெளியிட்டிருக்கிறார்கள். அவருடைய தனிப்பட்ட அறிக்கை எதுவும் எனக்குக் கிடைக்கவில்லை. கிடைத்தால் அதற்கு நேரடியாக பதிலளிக்க என்னால் முடியும் என்று குறிப்பிட்டார்.

இவற்றை வைத்துப் பார்க்கின்றபோது இது சாதாரணமான விடயம்தான். இதனைப் பெரிதுபடுத்தி தமிழ்க்கட்சிகளுக்குள் உட்பூசல்கள் பெரிதாக உள்ளது என்பதைக் சிங்கள தேசத்துக்கு காட்டும் செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடாது. இனவொற்றுமை என்று பேசிக்கொள்ளும் நாம் இதனை எமக்குள்ளேயே பேசி ஒரு தீர்வுக்கு வரவேண்டும்.

இப்படியிருந்தால்தான்தமிழ்மக்களுக்கும் கட்சிகளுக்குமிடையிலான ஒற்றுமையைப் பலப்படுத்தமுடியுமே தவிர தொடர்ந்தும் குரோதங்களை வளர்த்துக் கொண்டால் தமிழ்மக்களின் தமிழ்த்தேசியக் கனவை குழிதோண்டிப்புதைக்க வேண்டிய நிலைதான் உருவாகும். தமிழ்அரசியல்வாதிகளின் ஒற்றுமையும் தமிழ்மக்களின் ஒற்றுமையுமே தமிழனிம் தலைநிமிர்ந்து வாழ வழிவகுக்கும்.



# விளையாட்டு



# உலகம்



## 200பிடிகளை எடுத்து கலிஸ் சாதனை



இந்தியா, தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையே நடந்து வரும் இரண்டாவதும் இறுதியுமான கிரிக்கெட் டெஸ்ட் போட்டி டேர்பன் நகரில் நடைபெற்று வருகிறது. இப்போட்டியுடன் சர்வதேச டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஒய்வு பெறப்போவதாக கலிஸ் அறிவித்திருந்த நிலையில், அதிக பிடி களை பிடித்த வீரர்கள் வரிசையில் சாதனை படைத்துள்ளார்.

இறுதியாக நடைபெற்ற இரண்டாது நாள் ஆட்டத்தின் போது 108ஆவது ஒவரை பகுதிநேர சுழற்பந்து வீச்சாளரான டுமினி வீசினார். அந்த ஒவரின் 5ஆவது பந்தில் இந்திய வீரர் ஜடேஜா கொடுத்த பிடியைப் எடுத்த கலிஸ், இதன் மூலம் டெஸ்ட் போட்டிகளில் அதிக பிடிகளை பிடித்தவர்களில் இரண்டாவது இடத்தை பிடித்தார். இது வரை 166 போட்டிகளில் கலந்து கொண்ட கலிஸ் 200 கேட்சுகளை பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## தீபிகா குமாரி சம்பியன் பட்டம் வென்றார்



தேசிய வில்வித்தை போட்டியில் தீபிகா குமாரி சாம்பியன் பட்டம் வென்றார். ஜாம்ஷெட்பூரில் 34ஆவது தேசிய சீனியர் வில்வித்தை போட்டி நடந்தது. இந்தியாவில் இருந்து மொத்தம் 500க்கும் மேற்பட்ட வீர வீராங்கனைகள் பங்கேற்றனர்.

இதில் பெண்கள் ரிகர்வ் பிரிவு பைனலில், ஜோர்க்கண்ட் வீராங்கனை தீபிகா குமாரி குஜராத்தின் பிரனீதாவை எதிர் கொண்டார். இதில் அசத்தலான திறமையை வெளிப்படுத்திய தீபிகா வெற்றி பெற்றார். இதன் மூலம், தொடர்ந்து 6ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றார்.

ஆண்கள் பிரிவு பைனலில் அட்டானு தாஸ், சர்வீசஸ் அணியின் டிரிக்கியை வீழ்த்தி கோப்பை வென்றார். கலப்பு இரட்டையர் பிரிவு பைனலில் ஜெயந்த் தாலுகர், தீபிகா குமாரி ஜோடி, அசாம் அணியின் சஞ்சய், நர்சிரி ஜோடியை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை தட்டிச்சென்றது.

அணிகளுக்கு இடையிலான பெண்கள் பிரிவில் தீபிகா குமாரி அடங்கிய ஜோர்க்கண்ட் (203 புள்ளி)அணி முதலிடத்தை பெற்றது. இரண்டாவது மற்றும் மூன்றாவது இடம் முறையே பஞ்சாப்(202 புள்ளி), மேற்கு வங்க (201 புள்ளி) அணிகள் பெற்றன.

போட்டிகளின் முடிவில், 10 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலம் வென்ற ஜோர்க்கண்ட் அணி, ஒட்டுமொத்த சம்பியன்ஷிப் போட்டியில் முதலிடத்தை வென்றது. சர்வீசஸ் ஸ்போர்ட்ஸ் அணி, தலா 3 தங்கம், 3 வெள்ளி. 3 வெண்கலத்துடன் இரண்டாவது இடத்தில் உள்ளது. பஞ்சாப் அணி 1 தங்கம், 3 வெள்ளி, 4 வெண்கலத்துடன் மூன்றாவது இடத்தை பெற்றுள்ளது.

## ஓய்வு பெறுவாரா ஹர்பஜன் சிங்



இந்திய அணிக்காக இன்னும் 3 அல்லது 4 ஆண்டுகள் விளையாடுவேன். தற்போது ஓய்வு என்ற பேச்சுக்கே இடமில்லை என ஹர்பஜன் சிங் தெரிவித்தார்.

இந்திய அணியின் சுழற்பந்துவீச்சாளர் ஹர்பஜன் சிங் 33. இதுவரை 101 டெஸ்ட் (413 விக்), 229 ஒரு நாள் (259 விக்), 25 டுவென்டி-20 (22 விக்) போட்டியில் விளையாடி உள்ளார். கடைசியாக கடந்த மார்ச் மாதம் சொந்த மண்ணில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்டில் பங்கேற்றார். தற்போது ரஞ்சி கோப்பையில் கலந்து கொள்கிறார். இந்திய அணியில் விளையாட முடியாததால், ஓய்வு முடிவில் உள்ளதாக சொல்லப்பட்டது.

இது குறித்து இவர் கூறியது: இந்திய அணியில் இன்னும் 3 அல்லது 4 ஆண்டுகள் பங்கேற்று, அதிக விக்கெட் வீழ்த்த வேண்டும். இது தான் என் எண்ணம். எனவே ஓய்வு என்ற முடிவுக்கு இடமில்லை. ரஞ்சி கோப்பை தொடரில் பஞ்சாப் அணிக்காக முதல் இரு போட்டியில் 17 விக்கெட் வீழ்த்தினேன். இதன் பின் தோள்பட்டை காயம் காரணமாக வெளியேறினேன். இப்படி அவ்வப்போது காயம் தொல்லை தருகிறது. இருப்பினும் இதிலிருந்து விரைவில் மீண்டு இந்திய அணியில் மீண்டும் இடம்பிடிப்பேன் என நம்புகிறேன். இவ்வாறு ஹர்பஜன் சிங் கூறினார்.

## இருபது ஓவர் உலகக்கிண்ணம் இந்தியாவில்

வங்கதேசத்தில் நடப்பதாக இருந்த இருபது ஓவர் உலக கிண்ண போட்டிகள் இந்தியாவுக்கு மாற்றப்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளது. ஐசிசி சார்பில் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை இருபது ஓவர் உலக கிண்ண போட்டிகள் நடத்தப்படுகிறது.

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வங்கதேசத்தின் மிர்பூர், சிட்டகொங் மற்றும் சில்ஹெட் ஆகிய நகரங்களில் நடைபெறுவதாக இருந்தது. ஆனால் கடந்த சில வாரங்களாக வங்கதேசத்தில் அரசியல் ஸ்திரமற்ற சூழ்நிலை நிலவுவதால், இந்தியாவுக்கு மாற்றப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இரண்டு வாரங்களுக்கு முன் டாக்காவில் மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியினர் தங்கியிருந்த ஹோட்டலுக்கு அருகே குண்டுவெடித்தமை குறிப்பிடத்தக்கது.

## அஷ்வினுக்கு பி.சி.சி.ஐ விருது




பி.சி.சி.ஐ சார்பில் நடப்பு ஆண்டின் சிறந்த வீரருக்கு வழங்கப்படும் பாலி உம்ரிகர் விருதுக்கு இந்தியாவின் அஷ்வின் தேர்வு செய்யப்பட்டுள்ளார். கிரிக்கெட் போட்டிகளில் சிறந்து விளங்கும் இந்திய வீரர்களுக்கு ஆண்டு தோறும் இந்திய கிரிக்கெட் போர்ட் (பி.சி.சி.ஐ) சார்பில் விருது வழங்கி கௌரவிக்கப்படும்.

இந்த ஆண்டு பாலி உம்ரிகர் விருதுக்கு இந்திய சுழற்பந்துவீச்சாளர் அஷ்வின் தேர்வு செய்யப்பட்டார். பி.சி.சி.ஐ நிர்ணயித்த காலகட்டத்தில் 8 டெஸ்டில் விளையாடிய அஷ்வின், 43 விக்கெட் மற்றும் 263 ரண்கள் (2 அரைச்சதம்) எடுத்தார். 18 ஒருநாள் போட்டியில் 24 விக்கெட் வீழ்த்திய இவர், 4 சர்வதேச டுவென்டி-20 போட்டியில் 3 விக்கெட் கைப்பற்றினார். இவருக்கு விருதுடன் ரூ. 5 இலட்சம் பரிசு வழங்கப்படும். முன்னதாக இவ்விருதை மாஸ்டர் பேட்ஸ்மேன் சச்சின் (2006-07), சேவாக் (2007-08), கம்பீர் (2008-09), டிராவிட் (2010-11), கோஹ்லி (2011-12) ஆகியோர் வென்றனர்.

சிறந்த துடுப்பாட்டவீரருக்கான லால் அமர்நாத் விருதுக்கு, மும்பை வீரர் அபிஷேக் நாயர் தேர்வு செய்யப்பட்டார். கடந்த ரஞ்சி சீசனில் (2012-13) அசத்திய இவர் 966 ரண்கள் மற்றும் 19 விக்கெட் கைப்பற்றினார். இவருக்கு விருதுடன் ரூ. 2.5 இலட்சம் பரிசு வழங்கப்படும். 2012-13 இல் நடந்த உள்ளூர் தொடர்களில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய மும்பை அணிக்கு, சிறந்த அணிக்கான விருது வழங்கப்படுகிறது.

சமீபத்தில் முடிந்த வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அடுத்தடுத்து இரண்டு சதம் அடித்து அசத்திய இந்திய வீரர் ரோகித் சர்மாவுக்கு, சிறந்த சாதனையாளருக்கான திலீப் சர்தேசாய் விருது வழங்கப்பட உள்ளது. இவருக்கு விருதுடன் ரூ. 5 இலட்சம் பரிசு வழங்கப்படும். ரஞ்சி கோப்பை தொடரில் பேட்டிங், பௌலிங்கில் அசத்திய ஜிவான்ஜோத் சிங் சவுகான் (995 ரண்கள்), ஈஷ்வர் பாண்டே (48 விக்கெட்) ஆகியோர் மாதவ்ராவ் சிந்தியா விருதுக்கு தேர்வு செய்யப்பட்டனர். இவர்களுக்கு விருதுடன் ரூ. 2.5 இலட்சம் பரிசு வழங்கப்படும்.

## டெஸ்ட் அணியில் மீண்டும் ஹாபீஸ்



சமீபத்தில் மோசமான போர்ம் காரணமாக, தென்னாபிரிக்க அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் நீக்கப்பட்டார் முகமது ஹாபீஸ். இதனிடையே, தற்போது நடக்கும் இலங்கைக்கு எதிரான ஒரு நாள் தொடரில், முதல் நான்கு போட்டிகளில் மூன்று சதம் அடித்து போர்மை நிரூபித்தார். இதனால், மீண்டும் டெஸ்ட் அணியில் ஹாபீஸ் சேர்க்கப்பட்டார். தவிர, வேகப்பந்துவீச்சாளர் முகமது தல்காவும் இடம்பிடித்தார்.

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்கும், பாகிஸ்தான் அணியில் முகமது ஹாபீஸ் சேர்க்கப்பட்டார். இலங்கை, பாகிஸ்தான் அணிகள் மோதும் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் வரும் 31இல் அபுதாபியில் தொடங்குகிறது. இதற்கான, 15 வீரர்கள் கொண்ட பாகிஸ்தான் அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

அணி விவரம்- மிஸ்பா (கப்டன்), யூனிஸ் கான், முகமது ஹாபீஸ், மன்சூர், ஷேசாத், மக்சூத், அசார் அலி, ஆசாத் சபிக், அத்னன் அக்மல், ஜுனைட் கான், ரகாத் அலி, உமர் குல், தல்கா, சயீத் அஜ்மல், ரகுமான்.

## சுவானின் ஓய்வுக்கு பீட்டர்சன் காரணமா?



அவுஸ்திரேலியா சென்றுள்ள இங்கிலாந்து அணி வரலாற்று சிறப்பு மிக்க ஆஷஸ் தொடரில் பங்கேற்று விளையாடி வருகிறது. இத்தொடரில் மூன்று போட்டிகளிலும் இங்கிலாந்து படுதோல்வி அடைந்த காரணத்தால், கடும் விமர்சனங்களை சந்தித்து வருகிறது.

இந்நிலையில் இங்கிலாந்து சுழற்பந்து வீரர் சுவான், திடீரென ஓய்வு பெறுவதாக அறிவித்தது பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. தகுந்த உடற்தகுதியுடன் இல்லாததே இதற்கு காரணம் என தெரிவித்திருந்தார். இதற்கிடையே சக வீரரான பீட்டர்சனுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடே ஓய்வு பெற காரணம் என தகவல்கள் வெளியானது. இதனை மறுத்துள்ள சுவான், பீட்டர்சனுக்கும், தனக்கும் எவ்வித பிரச்சினையும் இல்லை என்றும், தன்னுடைய விருப்பப்படியே ஓய்வு பெற முடிவு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இதேபோன்று சுவானுடன் எவ்வித பிரச்சினையும் இல்லை என பீட்டர்சன் தெரிவித்துள்ளார்.

## திடீரென நாடு திரும்பினார் டெரன்பிராவோ

நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்திய தீவுகள் அணியின் டேரன் பிராவோ திடீரென நாடு திரும்பியுள்ளார். நியூசிலாந்து-மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதும் ஒருநாள் போட்டித் தொடர் நடந்து வருகிறது.

இதில் மேற்கிந்திய தீவுகள் அணியின் டேரன் பிராவோ திடீரென நாடு திரும்பியுள்ளார். சொந்தப் பிரச்சினை காரணமாக நாடு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை நியூசிலாந்து கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது.

# உலகச் செய்திகள்


## உறங்காமல் 500கி.மீ தூரம் ஓடி சாதனை



நியூசிலாந்தைச் சேர்ந்த 47 வயது பெண் ஒருவர் தூங்காமல் 500 கி.மீ தூரம் ஓடி புதிய சாதனை படைத்துள்ளார். நியூசிலாந்தின் வாய்கடோ பகுதியைச் சேர்ந்தவர் கிம் ஆலன்(வயது 47). நான்கு குழந்தைகளின் தாயான ஆலன், கடந்த அவர் கடந்த 19ஆம் திகதி காலை 6 மணிக்கு ஒக்லேண்டில் இருந்து ஓடத் தொடங்கினார்.

அவர் தொடர்ந்து 86 மணிநேரம் தூங்காமல் ஓடி 500 கி.மீ தூரத்தை கடந்துள்ளார். இதன் மூலம் தூங்காமல் அதிக தூரம் ஓடிய பெண் என்ற புதிய உலக சாதனையை படைத்துள்ளார். இதற்கு முன்பு அமெரிக்காவைச் சேர்ந்த பாம் ரீட் என்ற பெண் கடந்த 2005ஆம் ஆண்டில் 80 மணிநேரத்தில் 486 கிமீ ஓடியது தான் உலக சாதனையாக இருந்தது. நல்ல காரியம் ஒன்றிற்காக நிதி திரட்டவே கிம் தூங்காமல் ஓடினார் என்பது குறிப்பிடத்தக்கது.


## ஆபாச வலைத்தளங்களை தேடுவதில் இலங்கைக்கு முதலிடம்



2013ஆம் ஆண்டில் கூகிள் தேடுத்தளத்தில், ஆபாச இணையத்தளங்களை தேடிய நாடுகளில் இலங்கை முதலிடத்தை பெற்றுள்ளதாக கூகிள் நிறுவனத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கூகிள் நிறுவனம் வெளியிட்டுள்ள புள்ளிவிபரங்களின் படி இந்த தகவல் தெரியவந்துள்ளது.

இவ்வாறு ஆபாச தளங்களை தேடிய நகரங்களில் நுகேகொட முதலிடத்திலும் ஹோமாகம மற்றும் கொழும்பு நகரங்கள் இரண்டாம், மூன்றாம் இடங்களிலும் உள்ளன. 2012ஆம் ஆண்டும் இலங்கை இந்த விடயத்தில் முதலிடத்தில் இருந்தது. இரண்டாம் இடத்தில் இருந்த இந்தியா, தீமோர், எதியோப்பியா, பங்களாதேஷ் நாடுகள் இம்முறை 5ஆம் இடத்தில் உள்ளன.

## சிரியா தொடர்பில் பாப்பரசர் எச்சரிக்கை



சிரியாவுக்கான மனிதாபிமான உதவிகளை அனுமதிக்குமாறு, பாப்பரசர் பிரான்ஸிஸ் கோரிக்கை விடுத்துள்ளார். வத்திக்கானில் நடைபெற்ற கிறிஸ்மஸ் தினக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சிரியாவில் இடம்பெறுகின்ற மோதல்கள் சமாதானமாக நிறைவடைய வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை ஐரோப்பிய நாடுகளுக்குள் பிரவேசிக்க முற்படும் அகதிகளுக்கு எதிராக வன்முறைகளும், பாரபட்சமும் காட்டப்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## தலைநகரம் மாறுமா? தீவிர ஆலோசனையில் ஈரான்



ஈரானின் தற்போதைய தலை நகரான தெஹ்ரானுக்கு பதிலாக வேறொரு நகரை மாற்ற அந்நாட்டு அரசு தீவிர ஆலோசனை மேற்கொண்டு வருகிறது. ஈரானின் தற்போதைய தலைநகர் தெஹ்ரான். இங்கு மொத்தம் 1 கோடியே 10 இலட்சம் மக்கள் வசிக்கின்றனர்.

இதுமட்டுமல்லாது இங்கு வேலைவாய்ப்புகளை தேடி வருகிறவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து விட்டது. இதனால் இந்நகரம் மக்கள் வெள்ளத்தில் சிக்கி தவிக்கிறது. இதனையடுத்து இங்கு மாசு தொல்லையும் பெருகி விட்டதுடன், குற்றங்களும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் தலைநகரை மாற்ற அரசு தீவிரமாக ஆலோசித்து வருகின்றது. இதுகுறித்து நாடாளுமன்றத்தில் நடந்த வாக்கெடுப்பில், 214 உறுப்பினர்களில் 110 உறுப்பினர்கள் தலைநகரை மாற்ற தங்கள் ஆதரவை தெரிவித்துள்ளனர். மேலும் எந்த நகரத்தை புதிய தலை நகராக தெரிவு செய்வது என்பது குறித்து அமைக்கப்பட்ட ஆய்வு குழுவில், பெரும்பாலும் மத்திய மேற்கு நகரங்கள் தெரிவு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மகனின் அஸ்தியை வைரமாக மாற்றிய தந்தை




இத்தாலியில் தனது இறந்துபோன மகனின் சாம்பலை வைரமாக, தந்தையொருவர் மாற்றியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. சுவிட்சர்லாந்து நாட்டில் இறந்துபோனவரை எரித்தபின் கிடைக்கும் சாம்பலில் உள்ள காபனைப் பிரித்தெடுத்து ஒரு அறையில் பாதுகாத்து, அதன்பின் அதிக அழுத்தம் மற்றும் எரிமலையை ஒத்த வெப்பத்தை அந்த அறைக்குள் செலுத்துவதன்மூலம், அதனை வைரமாக மாற்றுகின்றனர்.

இந்த நினைவஞ்சலி வைரம் செய்யப்படுவதற்கு 18,000 டொலர் செலவாகும் என்று உள்ளூர் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. இத்தாலியின் வடக்குப் பகுதியில் உள்ள டிரேவிசோ என்ற நகரில் வாழ்ந்துவரும் 55 மதிக்கத்தக்க செல்வந்தர் ஒருவரின் 20 வயது மகன் இந்த ஆண்டு ஆரம்பத்தில் கார் விபத்து ஒன்றில் இறந்து போனான். அவனது உடல் சொந்த ஊரிலேயே புதைக்கப்பட்டது.

அதன்பின்னரே அவருக்குத் தனது ஆசை மகனை என்றென்றும் அருகில் வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. இதனால் புதைக்கப்பட்ட அவனது உடல் மீண்டும் தோண்டியெடுக்கப்பட்டு எரிக்கப்பட்டது. எரித்தபின் கிடைத்த சாம்பலை சேகரித்து அந்தத் தந்தை சுவிட்சர்லாந்துக்கு அனுப்பினார். சரியாக எட்டு மாதங்கள் கழிந்த நிலையில் அவரது மகனின் நினைவஞ்சலி வைரம் அவருக்குக் கிடைத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஒரு நாளைக்கு 254 கோடி சம்பாதித்த அமெரிக்கர்



2013ஆம் ஆண்டின் அதிகம் சம்பாதித்த நபராக கசினோ சூதாட்ட விடுதிகள் நடத்திவரும் அமெரிக்க தொழிலதிபர் அடெல்சன் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர் லொஸ் வேகாஸ், சீனாவின் மக்காவ் மற்றும் சிங்கப்பூரில் விதவிதமான சூதாட்ட மையங்களை தொடங்கியுள்ளார்.

இங்குள்ள சூதாட்ட விளையாட்டுக்களில் கலந்துகொள்ள உலகம் முழுவதும் உள்ள கோடீஸ்வரர்கள் அந்த விடுதிகளுக்கு படையெடுக்கின்றனர். இதனால், கசினோ சூதாட்ட விடுதிகளுக்கு இந்த ஆண்டு கொள்ளை இலாபம் கிடைத்துள்ளது. இதையடுத்து கசினோ அதிபர் ஷெல்டன் அடெல்சனின் ஒரு நாளைய வருமானம் 254 கோடி ரூபாய் என்று போர்ப்ஸ் பத்திரிக்கை கூறியுள்ளது. இச்சாதனையின் மூலம் உலகின் முன்னணி கோடீஸ்வரான வோரன் பப்பெட்டை அடெல்சன் முந்திவிட்டார் என்று கூறப்படுகிறது. இந்த ஆண்டில் மட்டும் 41 மில்லியன் டொலர் சம்பாதித்த கசினோ அதிபரின் சொத்து மதிப்பு 37 பில்லியன் டொலர் ஆகும்.

பேஸ்புக் வலைதள அதிபர் மார்க் ஸுகெர்பெர்க் இந்த ஆண்டில் ஒரு நாளைக்கு 230 கோடி வீதம் சம்பாதித்து இரண்டாம் ,இடம் பிடித்துள்ளார். மூன்றாவதாக அமேசன் அதிபர் ஜெப் பெஸோஸ் உள்ளார்.

## ஜப்பான் பிரதமருக்கு சீனா கடும் கண்டனம்



ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இருக்கும் யசுகுனி போர் நினைவிடத்திற்கு, விஜயம் செய்த அந்நாட்டுப் பிரதமரை சீனா கடுமையாக எதிர்த்துள்ளது. இதுதொடர்பாக சீன வெளியுறவுத்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளரான குவின் கங் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஜப்பானின் இராணுவ ஆக்கிரமிப்பு, காலனித்துவ ஆட்சி போன்ற வரலாறுகளை அழகுபடுத்தும் விதத்திலேயே ஜப்பானியத் தலைவர்கள் யசுகுனி நினைவிடத்திற்கு செல்லுகின்றனர். பிரதமரின் இந்த விஜயம் சீன மற்றும் ஆசிய மக்களின் உணர்வுகளை மிருகத்தனமாக மிதிப்பதுபோல் உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

சீனாவின் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி 1930களில் ஜப்பான் தங்கள் நாட்டின் மீது கொடூரமான படையெடுப்பை நடத்தியதன் உணர்வுகளை மக்களிடையே தட்டி எழுப்புவதன் மூலம் தங்கள் எதிர்ப்பிற்கான பொது ஆதரவை பெற நினைக்கின்றது. இரண்டாம் உலகப்போர் சமயத்தில் கிழக்கு ஆசியாவிலுள்ள பல நாடுகளை ஜப்பான் ஆக்கிரமித்தது.

அப்போது பொதுமக்களிடமும், போர் கைதிகளிடமும் ஜப்பான் இராணுவம் நடந்துகொண்டவிதம் மிகவும் மோசமாக சித்தரிக்கப்பட்டது. நான்ஜிங் படுகொலை போன்ற சம்பவங்கள் ஜப்பானின் அட்டூழியங்களுக்கு சாட்சியமாயின.

ஜப்பான் நடத்திய போர்களில் இறந்த வீரர்களுக்கு நினைவிடமாக 1970ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட யசுகுனி நினைவிடம் 2.5 மில்லியன் போர்வீரர்களுக்கு மட்டுமின்றி போர்க்குற்றங்களுக்காக மரணதண்டனை அளிக்கப்பட்ட பல உயர்மட்ட அதிகாரிகளுக்கும் நினைவிடமாக உள்ளது.

இந்தப் போர்களின் விளைவாக சீனா 20.6 மில்லியன் மக்களை இழந்துள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். இப்போதுகூட, ஜப்பான் தனது விரிவாக்கத்தின் தொடர்பாக ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக கூறப்படும் சீனத் தீவுகள் பிரச்சினையும் இதனை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததே ஆகும் என்ற கருத்து நிலவுகின்றது.









பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்
சகல விதமான தையல் இயந்திரங்களும் தங்கள் இருப்பிடத்திற்கே வந்து திருத்திக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு :- 077 6906182

# விந்தை உலகம்

## 1000 அடி உயர கட்டிடத்தில் ஏறி அதிர்ச்சியில் ஆழ்த்தும் மனிதர்.....

சீனாவின் ெய்ஜியாங் மாகாணத்திலுள்ள ஹொறிஷன் செண்டர் கட்டிடத்தில் ஏறி Alain Robert எனும் 51 வயதான நபர் 1000 அடிகள் உயரமான கட்டித்தில் ஏறி அசத்தியுள்ளார்.






## வரதட்சணையாக 10 இலட்சம் பேஸ்புக் Likes கேட்ட மாமனார்




ஏமனில் தந்தை ஒருவர், தனக்கு வரப்போகும் மருமகனிடம் பேஸ்புக்கில் 10 இலட்சம் லைக்சை வரதட்சணையாக கேட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஏமனில் உள்ள தாய்ஸ் நகரைச் சேர்ந்தவர் சலீம் ஆயஷ், கவிஞர். இவர் தனக்கு வரப்போகும் மருமகனிடம் வித்தியாசமான ஒன்றை வரதட்சணையாக கேட்டுள்ளார்.அதாவது, தனது மகளை திருமணம் செய்ய வேண்டும் என்றால் தனது ஃபேஸ்புக் பக்கத்திற்கு 10 இலட்சம் லைக்ஸ் பெற வைக்க வேண்டும் என்பதையே அந்த வரதட்சணையாகும். தற்போது சலீம் ஃபேஸ்புக் பக்கத்தை 30 ஆயிரம் பேர் லைக் செய்துள்ளனர். 10 இலட்சம் லைக்சை பெற இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் எடுத்துக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எக்ஸ்-ரே கண் வினோத முறையில் காதலை வெளிப்படுத்திய காதலன்..



அமெரிக்காவை சேர்ந்த இளைஞர் ஒருவர், தனது காதலியிடம் வித்தியாசமான முறையில் காதலை வெளிப்படுத்தியுள்ளார். அமெரிக்காவின் ஓரிகானைச் சேர்ந்த 3டி ஆர்ட்டிஸ்ட் ரொபர்ட் ஃபிங்க்.

இவர் ஏஞ்சல் ஒயிட் என்ற பெண்ணை ஒருதலையாக காதலித்து வந்துள்ளார். தனது காதலை தெரிவிப்பதற்காக வித்தியாசமான முறையில் யோசித்துள்ளார். அதாவது **'Knight Man A Quest For Love'** என்ற வீடியோ கேமை வடிவமைத்து, தன் காதலியிடம் கொடுத்துள்ளார். இதில் பல சாகசங்களை செய்து இளவரசியை காப்பாற்றும் நாயகன், கடைசியில் என் காதலை ஏற்றுக் கொள்கிறாயா என கேட்கிறான். அப்போது Yes அல்லது No என இரண்டு பட்டன்கள் வருகிறது.

இதனை பார்த்த ஏஞ்சல், Yes பட்டனை அழுத்தி, காதலனுக்கு பச்சை கொடி காட்டிவிட்டாராம். கிட்டத்தட்ட 5 மாதங்களாக தயாரித்த இந்த வீடியோ கேமின் கதாநாயகி பெயர் ஏஞ்சல் வைட் என்பது குறிப்பிடத்தக்கது.



தினப்புயல் வாசக,வர்த்தக பெருமக்களே...
பண்டிகை தினங்களை முன்னிட்டு விசேட
விலைக்கழிவுடன் வர்த்தக விளம்பரங்களை
பிரசுரித்துக்கொள்ள இன்றே முந்திக்கொள்ளுங்கள்
தினப்புயல்
6ம் ஒழுங்கை,கண்டி வீதி
தேக்கவத்தை, வவுனியா.
தொ.பே:024-2227558,
071-1850885







மீண்டும் புதுப்பொலிவுடன் யாழ்,வன்னி மண்ணில்...
Govt Regd (INTERNATIONAL)VE/IND/33&W1A83347
VIMB
வாணி சர்வதேச திருமண நிலையம்
VANI INTERNATIONAL MARRIAGE BUREAU






வன்னிமண்ணில் போர்க்கால சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட விசேடதேவைக்குட்பட்டோருக்கும், வாழ்விழந்த குடும்பங்களுக்கும் முற்றிலும் இலவசமான சேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.
கனடா, லண்டன், அமெரிக்கா, இந்தியா, பிரான்ஸ், சுவிஸ், அவுஸ்திரேலியா, டென்மார்க், ஜேர்மன் நாடுகளில் குடியுரிமை பெற்ற டொக்டர், இஞ்சினியர், லெக்சரர்களுக்கு மணமகன், மணமகள்மார் தேவை.
சகல இன, மத, சமூக, உள்நாட்டு, வெளிநாட்டு PR உள்ள, இல்லாத ஆண்கள், பெண்களுக்கான வரன்களை உங்கள் விருப்பப்படியும், சாஸ்திர கணிப்பின் படியும் நேரில் வந்து தெரிவு செய்யலாம்
யுத்தகாலத்தில் பதிவு செய்த பதிவுகள்
தற்போது இல்லாமையால் திரும்பவும் பதிவுசெய்யலாம்.





உள்நாட்டுக்கிளைகள்:-
* கொழும்பு * திருகோணமலை * மன்னார்
* மட்டக்களப்பு * முல்லைத்தீவு * கிளிநொச்சி
* வடமராட்சி * தென்மராட்சி *புங்குடுதீவு *வேலணை
வெளிநாட்டுக்கிளைகள்
P. Akilan
212/1 Parlimental Rd
Ontarrio-Canada
S.Ponnampalam
211#Livepool Rd
London (Uk)
தொலைபேசி தொடர்பு கொண்டு நேரத்தை பெற்று நேரில் வரவும்
உங்கள் விபரங்களை தினப்புயல் விலாசத்திற்கும் நேரில் வந்து பதிவு செய்யுங்கள்.
வவுனியா கிளை
S.ஜெகதீஸ்வரன்.
சூசைப்பிள்ளையார்குளம்.
வவுனியா.
Tel:-0771479416,
0776184434,
0778501013
email:-usauk@gmail.com
WWW.keethannet.com
INTERNATIONAL HEAD OFFICE LONDON






இப்பத்திரிகை இலக்கம் 165A, குருமன்காட்டில் அமைந்துள்ள G.H அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 29.12.2013 அன்று வெளியிடப்பட்டது.